# அண்ணல் நபியின் அதிசயங்களும் அருமை சஹாபாக்களும்

## (நாற்பது சம்பவங்கள்)

பக்கம்


1. வாருங்கள் அண்ணலாரைக் காண்போம் 7
2. அண்ணலாரின் அற்புத சிறப்பம்சங்கள் 13
3. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் நாயகத்தோழர்களும் 19
4. மண்ணறையின்மீது ஈச்சமரத்தின் கொப்பை நட்டியது ஏன்? 22
5. இரண்டு முறை துக்கத்தை வெளிப்படுத்தியதற்கு காரணம் என்ன? 23
6. கோவேறு கழுதை ஏன் மிரண்டது? 25
7. மண்ணறைகளில் வேதனை 26
8. ஏன் சிரித்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) 29
9. ஜனாஸாவைக் கண்டதும் எழுந்து நின்றது ஏன்? 30
10. திடீரென்று எழுந்து வெளியே சென்றது ஏன்? 32
11, ''ருக்னுல் யமானில்'' ஒரு குறிப்பிட்ட துஆவை மட்டும் ஓதியது ஏன்? 34
12. முஜ்தலிபாவில் சிரித்தது ஏன்? 35
13. அண்ணல் நபி (ஸல்) ஆச்சரியமுற்றதேன்? 37
14. ஜனாஸா லேசாக இருந்ததற்குக் காரணமென்ன? 38
15. சுவனத்தில் பிலால் (ரலி)யின் காலடி ஓசைக்குக் காரணமென்ன? 39
16. சஹாபியின் முன் திருமறையை ஏன் ஓதினார்கள்? 41
17. நீண்டநேரம் இரகசியம் பேசியது யார்? 42
18. நீண்டநேரம் சஜ்தாவில் இருந்தது ஏன்? 42
19. வீட்டிற்கு வந்தவர் திரும்பிச் சென்றது ஏன்? 43
20. திரைச் சீலைகளை ஏன் கிழித்தார்கள்? 45
21. மலை அதிர்ந்தது ஏன்? 46
22. பெருவிரலால் நடந்தது ஏன்? 47

பக்கம்


23. இறந்தவனின் கண்கள் திறந்திருப்பது ஏன்? 48
24. மய்யித்தை குளிப்பாட்ட தடுத்தது ஏன்? 49
25. அனுமதியில் மாற்றம் ஏன்? 51
26. ஹஸனை மட்டும் ஆதரித்தது ஏன்? 53
27. ருகூவில் நீண்ட நேரம் தாமதித்தது ஏன்? 55
28. திராட்சைப்பழம் யாருக்கும் கொடுக்காமல் சாப்பிட்டது ஏன்? 58
29. மூன்று முறை ஆமீன் கூறியது ஏன்? 60
30. தொழும்போது கிப்லாவை மாற்றியது ஏன்? 61
31. தொழுகையில் காலணிகளை கழற்றியதேன்? 64
32. நீண்டநேரம் துஆ கேட்டதேன்? 64
33. சிந்தும் ரத்தம் நிலத்தில் விழாமல் தடுத்ததேன்? 65
34. திடீரென்று ஏன் ஸலாம் சொன்னார்கள்? 68
36. தொழுகையில் விசித்திர நடவடிக்கைகள் ஏன்? 69
36. மூவரில் ஒருவருக்கு மட்டும் நாணம்கொண்டதுஏன்? 71
37. பூரண விஸ்வாசம் இல்லை என கூறியது ஏன்? 72
38. ஏன் அழுதார்? ஏன் சிரித்தார்? 73
39. பத்ருப்போர் அன்று எதை அதிசயமாகப் பார்த்தார்கள்? 75
40. அண்ணல் நபி சொன்ன மரம் எந்த மரம்? 77
41. கிழவிகள் சுவர்க்கம் செல்ல மாட்டார்கள் ஏன்? 78
42. பேராச்சரியம் அடைந்த காரணம் என்ன? 79
43. அல்லாஹு அக்பர் என்று கூறியது ஏன்? 81
44. அல்லாஹ் ஏன் வியப்புற்றான்? 83
45. வந்தவர் யார்? 85
46. சஹாபாக்களைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்) 88
47. நபிகள் நாயகம் (ஸல்) பேசுகிறார்கள் 91
48. இறுதி வார்த்தைகள் 94




# 1. வாருங்கள் அண்ணலாரைக் காண்போம்!

அருமையானவர்களே!

வாருங்கள் அண்ணலாரைக் கண்டு வருவோம். 1400 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த அண்ணலாரைக் கண்டு வரவே அழைக்கின்றேன்.

ஆச்சரியமாக இருக்கிறதா? உண்மையாகத்தான் உங்களை அழைக்கிறேன். இதோ! நம் கண் முன்னே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

யாரைப் படைக்கவில்லையென்றால் வானம், பூமி, சூரியன், சந்திரன், மலை, திடல், கடல், நதி, பாதாளம், அர்ஷ், குர்ஸீ, லவ்ஹுு, கலம், ஜின்கள், மலக்குகள் இன்னும் உலகிலுண்டான அனைத்துப் படைப்புகளையும் படைத்திருக்க மாட்டேன் என்று எந்த நபியைச் சுட்டிக்காட்டி அல்லாஹுத் தஆலா சொன்னானோ அந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத்தான் காணப்போகிறோம்.

எதுவுமே இல்லாதிருந்து படைப்புகளுக்கெல்லாம் முந்திய படைப்பாக எந்த தூதரைப் படைத்தானோ அந்த ''நூரே முஹம்மதியா'' வான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தான் காணப்போகிறோம்.

''அல் இன்ஸானு ஸிர்ரீ, வஅன ஸிர்ருஹு'' அதாவது மனிதன் எனது இரகசியம். நான் அவனது ரகசியம்'' என்று அல்லாஹுத் தஆலா எந்த அடிப்படையில் கூறினானோ

அந்த ரகசியத்திற்கு இலக்கணமான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இங்கே காணப் போகிறோம். அகிலத்தார்களுக்கெல்லாம் அருட்கொடையாக அனுப்பப்பட்ட நபி என்று எந்த நபியைச் சுட்டிக்காட்டி அல்லாஹுத் தஆலா சொன்னானோ அந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே இப்போது நேருக்குநேர் காணப்போகிறோம். ''மனிதர்களுக்கோர் முன்மாதிரி'' என்று எந்த மனிதரைப்பற்றிப் அல்லாஹுத் தஆலா திருமறையில் பிரஸ்தாபித்தானோ அந்த மனிதரைத் தான் இங்கு காணப் போகிறோம்.

''யா நப்ஸீ, யா நப்ஸீ'' என்று தங்களுடைய நிலை என்னவாகுமோ என்று கதிகலங்கி எல்லோரும் நிற்கும் சமயத்தில் மறுமையில் தங்களுடைய உம்மத்துக்களின் நிலை என்னவாகுமோ என்று கதிகலங்கிய நிலையில் ''யா உம்மத்தீ, யா உம்மத்தீ,'' என்று எந்த நபி நமக்காக அந்த மஹ்ஷர் மைதானத்தில் அலைவார்களோ அந்த காருண்ய நபியைத் தான் காணப் போகிறோம்.

''வாருங்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்னால் உங்களை அழைத்துச் செல்கிறேன். நெருங்கி வாருங்கள், உங்களுக்காக ''ஸிஹாஹ் ஸித்தா'' என்னும் ஹதீது கிரந்தங்கள் காத்துக் கிடக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி படம் பிடித்துக் காட்ட அவைகள் ஆவலோடு நம்மை அழைக்கிறது. இதோ புத்தகங்களில் எனது கரங்கள் பட்டதும் பக்கங் திரும்புகின்றன.

''அதோ பாருங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக நெருங்கியிருக்கிறார்கள். அவருடைய அங்க அடையாளங்கள் பிரதிபலிப்பது தெரிகிறது. வதனங்களில் எழில் சாயல் நம் கண்முன்னே நபிகள் நபிகள் (ஸல்) அவர்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறது.

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக மெலிந்தவராகவோ, அல்லது பருமனுடையவராகவோ இல்லாது நடுத்தரமான உடல்வாகு கொண்டவராக இருந்தனர். வதனம் வட்ட வடிவமாகவோ அல்லது நெடியதாகவோ இல்லாமலிருந்தது. இரு புஜங்களுக்கிடையிலுள்ள மார்பகம் விசாலமானதாக இருந்தது.



இரு அகங்கைகளும், உள்ளங்கால்களும் சதைபிடிப்புள்ளதாக இருந்தது. கரண்டைக்கை நீண்டிருக்கும்; அகங்கை விரிந்திருக்கும். கை, கால்களின் விரல்கள் பொருத்தமான நீளமுடையதாக இருந்தன. பாதக்கால் சற்று குழிவிழுந்திருக்கும். இரு பாதங்களும் ஒப்புரவாயிருக்கும். ஆதலால் அவைகளில் தண்ணீர் பட்டால் எங்கும் தங்குவதில்லை. மொழிகள் பருத்து எலும்புத்தாக்குள்ளவைகளாக இருக்கும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிக உயரமுடையவர்களாகவோ, அதிக குட்டையாகவோ இல்லாது நடுத்தரமான உயரமுடையவர்களாக இருந்தார்கள். ஆனால் சஹாபாக்களுக்கிடையில் நடந்து வந்தாலோ, நின்றாலோ அவர்களைக் காண உயரமாகவே தென்படுவர். அதே போல கூட்டத்தில் அமர்ந்தால் எல்லோரைக் காட்டிலும் அவர் உயரமாகவே காணப்படுவர். அவர்களுடைய மேனி முற்றிலும் சிவப்பாகவோ, வெண்மை நிறமுடையதாகவோ இல்லாது சிவப்பு கலந்த வெண்மை நிறமுடையவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய முகத்தில் அல்லாஹ்வுடைய அச்சம் மிகைத்த பொழுதோ, கோபத்திலோ, கவலை, சந்தோஷம் போன்ற சந்தர்ப்பங்களில் நிறம் மாறுபடும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சிரசு சற்று பெரிதாகவே இருக்கும். அன்னாருடைய தலை முடி முற்றிலும் சுருட்டையில்லாது நேரானதாகவோ இல்லாது இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் காணப்படும். தலைமுடி அடர்ந்து காணப்படும். முடி வளர்ந்து காதின் பாதியளவு (அதாவது காதின் சோணையளவு) தொங்கிக் கொண்டிருக்கும். விழிகள் ஒளி பொருந்தியதாக நன்றாக கருத்து இருந்தன. புருவங்கள் ஒன்றுக்கொன்று சேராமல் விலகியே இருந்தன. இமைகள் நீண்டு காணப்படும்.

அன்னாரின் மேனியில் அதிகமானரோமங்கள் காணப்பட
வில்லை. ஆனால் ஒரு மெல்லிய ரோமக்கொடி மார்புக்கும்,
தொப்புளுக்கும் இடையில் ஓடிக்கொண்டிருக்கும். அதாவது
மெல்லிய கோடு போட்டதைப் போல் இருக்கும், வயிற்றின்
மீதும், மார்பின் மீதும் ரோமங்களே இல்லாதிருந்தது.
ஆனால் நெஞ்சின் மேற்பாகங்களில் ரோமங்கள் காணப்பட்
டன. வாய் விரிந்தும், ஒடுங்கியுமிராது நடுத்தரமாக அழகாகக்
காணப்பட்டது. அன்னாரின் பற்களின் வரிசை நேர்த்தியாக
அழகாக இருந்தது. மேலும் சிறுசிறுபற்களாக இடைவெளி
கொண்டதாக இருந்தது. பற்கள் பளிச்சென்று ஒளிவீசிக்
கொண்டிருக்கும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாய்விட்டுச் சிரிக்கமாட்
டார்கள். எப்பொழுதும் புன்முறுவலே அதிகம் சிந்துவார்கள்.
அன்னாரின் தாடி முடி அதிக நெருக்கமாகக் காணப்பட்டது.
அன்னாரின் தலையிலும், தாடியிலுமுள்ள முடிகளில் இரு
பது முடிகள் மட்டுமே நரை முடிகளாக இருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடக்கும் பொழுது ஒரு
பள்ளத்தாக்கில் அடியெடுத்து நடப்பது போல முன்புறமாகச்
சற்று கவிழ்ந்து நடப்பார். பாதத்தைப் பூமியிலிருந்து பிடுங்கி
எடுப்பதுபோல அழுத்தமாக அடியெடுத்து வைத்து நடப்பார்.
வேகமாகவும், பாதங்கள் விசாலமாகவும் வீசி வைத்தும் நடப்
பது வழக்கம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை யாரேனுமழைத்தால்
அவரை முழு உடம்பையும் திரும்பி நின்றுதான் பார்ப்பார்
கள். அன்னாரின் முதுகில் இரண்டு புயங்களுக்கிடையில்
''காத்தமுன் நபி''க்கான ''இறுதிநபி'' முத்திரையாக இலாஞ்
சனை ஒன்று காணப்படும். அன்னாரின் பார்வை எப்பொழு
தும் கீழ் நோக்கியே இருக்கும். பெரும்பாலும் கடைப்பார்
வைக் கொண்டே நோக்கும் குணமுடையவராக இருந்தார்
கள். சஹாபாக்களுடன் செல்லும் பொழுது அவர்களுக்கு
முன்னே செல்ல விருப்பப்பட மாட்டார். சஹாபாக்களை



முன்னே விட்டு பின்னேதான் செல்வார்கள். யாரைப்பார்த்
தாலும் உடனே ஸலாம் சொல்வதில் முந்திக்கொள்வார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தலைமுடிக்கும், தாடிக்
கும் எண்ணெயிட்டு சீவிக் கொள்வார்கள். தலை முடியை
சீவும் பொழுது முதன் முதலாக வலப்புறமாக சீவ ஆரம்பிப்
பது வழக்கம். இன்னும் வகிடெடுக்கும் பொழுது மத்தியில்
நேராகவே வகிடெடுத்து சீவுவது வழக்கம்.

அன்னாரின் ஆடைகளில் மணிக்கட்டுவரை 'கைகளுடைய
அங்கியையே மிகப்பிரியமாக உடுத்துவார்கள். அவர்கள் எப்
பொழுதும் பாதரட்சைகளை அணிந்தே செல்வது வழக்கம்.
அந்த பாதரட்சைகள் இரண்டு மேல்வார்கள் கொண்ட
தாக இருந்தது. அன்னாரிடம் ஒரு ''சுர்மாகூடு'' இருந்
தது. அதிலிருந்து ஒவ்வொரு நாள் இரவும் ஒவ்வொரு கண்
ணுக்கும் மும்மூன்று முறைகள் சுர்மா போட்டுக் கொள்வார்
கள். ''இஸ்மிது'' என்னும் அஞ்சனத்தூளையே அவர்கள்
விரும்பி உபயோகிப்பர். அன்னாரின் வலது கையில் ஒரு
கணையாழியை அணிந்திருப்பர். அதை எப்பொழுதும்
அணிந்திருப்பதில்லை. சில வேளைகளில் மட்டுமே அணிந்
திருப்பர். அது வெள்ளியினால் செய்த மோதிரமாகும்.
அதில் மூன்று வரியில் காணப்பட்டது. ஒரு வரியில் ''முஹம்
மது'' என்றும், இரண்டாவது வரியில் ''ரசூல்'' என்றும்
மூன்றாவது வரியில் ''அல்லாஹ்'' என்றும் செதுக்கப்பட்டி
ருந்தது. மலஜலம் கழிக்கச் செல்லுகையில் விரலிலுள்ள
கணையாழியைக் கழற்றி வைத்துவிட்டுச் செல்வர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ''ஜுல்பிகார்''
என்னும் ஒரு வாள் இருந்தது. அது இரண்டு பக்கமும்
கூர்மையுள்ளது. அந்த வாளின் பிடியின் மீது வெள்ளிக்
கவசமிடப்பட்டிருக்கும். அந்த வாள்தான் மக்கா நகரம் கைப்
பற்றப்படும் பொழுது அன்னாரின் கரங்களிலிருந்தது. பின்
னால் அந்த வாளை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அன்
பளிப்பாகக் கொடுத்து விட்டனர்.

அன்னார் எப்பொழுதும் கறுப்புத் தலைப்பாகையே
கட்டியிருப்பார்கள். தங்களிடமிருக்கும் பரிமளச் செப்பி
லிருந்து வாசனை திரவியங்களைப்பூசிக் கொள்வார். நபி
கள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசும் பொழுது நிதானமாக
அவசரமில்லாது பேசுவார்கள். தெளிவாகப் பேசுவார்கள்.
மற்றவர்கள் நல்லபடியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்ப
தற்காக மூன்று முறை திரும்பத்திரும்பக் கூறுவார்கள்.

பெரும்பாலும் மௌனமாகவே இருப்பார்கள். தேவை
யின்றி பேசமாட்டார்கள். வாய் நிறைய பேச ஆரம்பித்து
வாய் நிறையமுடிப்பார்கள். ஏதாவதொன்றைச் சுட்டிக்காட்ட
நேரிடும்போது தங்களுடைய முழுக்கரத்தையும் கொண்டு
சுட்டிக் காட்டுவார்கள். ஒன்றைக் கண்டு ஆச்சரியப்பட்டால்
கரத்தைப் புரட்டிக்கொள்வார்கள். பேசும்பொழுது சிலசமயங்
களில் இடக்கரத்தின் கட்டை விரலால் வலக்கரத்தின் அகங்
கையால் உட்புறத்தில் அடித்துக் கொள்வார்கள்.

எவர் மீதேனும் கோபம் கொண்டு விட்டால் முகத்தைத்
திருப்பிக் கொள்வார்கள். மகிழ்ச்சியுண்டானால் கண்களை
மூடிக்கொள்வார்கள். சில சமயங்களில் இருகரங்களால் கால்
களை வட்டமிட்டுக் கட்டிக்கொண்டு ஆசனத்தை நிலத்தில்
வைத்து அமர்ந்திருப்பார்கள்.

உணவருந்தி முடிந்தவுடன் மூன்று முறை விரல்களைச்
சூப்பிக் கொள்வார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு
இனிப்பு என்றால் அதிகமான பிரியம், தேனை விரும்பி
உண்பார்கள். காய்களில் சுரைக்காய் மிகவும் பிடிக்கும்
சுரைக்காய் குழம்பு வைத்தால் சுரைக்காயைத் தேடித்தேடி
பிடித்து எடுத்து உண்ணுவர். ஆட்டின் முன்னங்கால் இறைச்
சியை மிகவும் விரும்பி உண்ணுவார்கள். பாத்திரத்தில் மீத
மிருக்கும் உணவின் மீதே அதிகம் விருப்பம் கொண்டவர்
களாகவே இருந்தார்கள். வெள்ளரிக் காயைப் பேரீத்தங்
கனிகளுடன் உண்டார்கள், சூடான பானங்களைவிட
குளிர்ந்த பானங்களையே மிகவும் அதிகமாக விரும்பி பருகு



வர். பானங்களை அருந்தும் பொழுது மூன்று முறை சுவாசம்
விட்டுக் கொள்வர். இன்னும் கனிவான பேச்சு, அன்பான
பார்வை, ஆறுதலான சொற்கள், அமைதியான சுபாவம்,
நிதானமான பேச்சு, அதிகமான புன்முறுவல் இவையாவும்
அன்னாருடைய குணங்களாகவே இருந்து வந்தன.

இப்பொழுது கண்களை மூடிக்கொண்டு உங்களுடைய
மனக்கண்ணால் பாருங்கள். உங்கள்முன் ''காத்தமுன் நபி''
நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்முறுவலோடு நிற்கும்
காட்சியைக் காண்பீர்கள்.

—✱—

# 2. அண்ணலாரின் அற்புத சிறப்பம்சங்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழகிய குணநலன்
களைப் பெற்றிருந்தார்கள் என்பதை அறிவீர்கள். ஆனால்
அவர்களுடைய சிறப்பம்சங்களின் அற்புதங்களைக் கேள்விப்
பட்டிருக்க மாட்டீர்கள். எனவே அந்த அற்புத சிறப்பம்சங்
களையும் இங்கே அறிந்துகொள்ளுங்கள். அவற்றை வரிசைப்
படுத்திக் காட்டுகிறோம்.

1. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறக்கும் பொழுதே ''விருத்த சேதனம்'' செய்த நிலையிலேயேதான் பிறந்தார் கள்.

2. அன்னாருடைய நிழல் பூமியில் விழாது.

3. அன்னாருடைய உடலில் ஈக்கள் அமர்ந்ததில்லை.

4. அன்னாருடைய மலத்தை பூமி அப்படியே விழுங்கி விடும். பிறருடைய பார்வையில் பட்டதில்லை.

5. சிறுநீர் கறையற்றதாக இருந்தனர். (மண் நிலத் தில் சிறுநீர் கழிக்கும் பொழுது குழி விழுவதைப் போன்று அன்னார் சிறுநீர் கழிக்கும் பொழுது நிலத்தில் குழிவிழாது.)

6. நித்திரையில் ஸ்கலிதம் நழுவாதிருந்தனர். அதாவது அவர்கள் எப்பொழுதுமே பரிசுத்தமாகவே இருப்பார்கள். இரவில் சிலருக்கு சொப்பனஸ்கலிதம் உண்டாவது போல் அன்னாருக்கு எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை.

7. வாகனப் பிராணிகள் அவரைக் கண்டு மிரளாதிருக்கும். எந்த பிராணியாக இருப்பினும் அன்னார் அருகே சென்றால் அமைதியாக நின்றுவிடும். அது மிரண்டு ஓடாது.

8. முன் புறம் பார்ப்பதுபோலவே பின்புறம் பார்க்கும் தன்மையைப் பெற்றிருந்தார்கள். முன், பின் நோக்கும் நிலையை அவர்கள் பெற்றிருந்ததால் தலையைத் திருப்பாமலேயே பின்னாலுள்ள காட்சிகளையும் காண்பர். யாரேனும் அழைத்தால் அழைத்தவர் யார் என்புதை திரும்பிநின்றநிலையிலேயே அறிந்துகொண்டு விடினும் அந்த மனிதரோடு பேச வேண்டுமென்பதற்காகத் தலையை மட்டும் திருப்பாமல் தேகம் முழுவதையுமே திருப்பிப் பார்க்கும் இயல்புடையவர்களாக இருந்தார்கள்.

9. புறக்கண்கள் மூடியிருந்தாலும் அகக் கண் உறங்காத தன்மையைப் பெற்றிருந்தார்கள், அதாவது இமைகள் மூடி உறங்கினாலும் உள்ளம் விழிப்பின் நிலையிலேயே இறைவனை தியானித்துக் கொண்டிருக்கும். எனவே உறங்கும் பொழுதும்கூட நடக்கும் செயல்களை அறியக் கூடியவராகவே இருந்தனர்.

10. எத்தகைய கூட்டத்தில் அமர்ந்தாலும் எழிற்புயம் உயர்ந்தவராகவே காணப்பட்டனர். அன்னார் மிக உயரமான வர்களோ, மிகக் குள்ளமானவராகவோ இல்லாது நடுத்தரமான உயரமுடையவர்களாக இருந்தனர். சஹாபிகளில் பலர் அன்னாரைவிட உயரமுடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். எனினும் அந்த கூட்டத்திற்குள் அமர்ந்தால் எல்லா சஹாபிகளைக் காட்டிலும் உயரமாகவே, எல்லோருக்கும் தெரியும்படியே காட்சியளிப்பார்கள்.



11. அன்னாருடைய மேனியிலிருந்து வெளிப்படும் வியர்வை கஸ்தூரியின் வாடையைப் போல மணமுடையதாக இருக்கும். அன்னார் உறங்கும்போது அன்னாரின் மேனியிலிருந்து வெளிப்படும் வியர்வையை அன்னாரின் மனைவிமார்களிலொருவர் வழித்து எடுத்து ஒரு குப்பியில் நறுமணப் பொருளாக சேகரித்து வைக்கும் பழக்கமுடையவராக இருந்திருக்கிறார்.

12. நெட்டுயிர்ப்பு இல்லாத நற்றவ வேந்தர் என்னும் சிறப்பைப் பெற்றவர்.

13. பொதுவாக எல்லா மனிதர்களிடமும் சாட்டப்பட்டிருக்கும் ஷைத்தான் கெட்டதையே தூண்டுவான். ஆனால் அன்னாருக்கு நல்லதையே சொல்லுவான். ஏனெனில் அவன் முஸ்லிமாகி விட்டான். அதாவது அடங்கி விட்டான்.

14. அன்னார் நடந்து செல்லும்போது மேகங்களும் நிழலிட்டபடியே செல்லும்.

15. பிராணிகள் பேசுவதை அறிந்திருந்தனர். மரக் கட்டையும், கற்களும், தாவரங்களும்கூட அன்னாரிடம் பேசுவதை அறியும் இயல்புடையவராக இருந்தனர். இதற்கு எத்தனையோ ஆதாரங்கள் ஹதீது கிரந்தங்களில் இருக்கின்றது.

எஜமானன் துன்புறுத்தும் வேதனையை ஒரு ஒட்டகம் முறையிட்டதை அறிந்து உரிய எஜமானிடம் சொல்லி ஒட்டகத்தை மேலும் துன்புறுத்தாமலிருக்கும்படி செய்துள்ளார்கள். மஸ்ஜிதுந் நபவியில் புதிய மிம்பர் படிகளை அமைக்கப்படும் போது அதுவரை மிம்பர் படிகளாக உபயோகப் படுத்திய மரக்கட்டையை அப்புறப்படுத்திய பொழுது அது அழும் குரலைக் கேட்டார்கள். அதனுடைய துக்கத்திற்கு ஆறுதல் கூறினார்கள்.

ஒருமுறை நடந்து செல்லுகையில் மூன்று சிறு கற்களை எடுத்து கையில் வைத்துக் கொண்டு, அந்த கற்களை ஒரு

சஹாபியை அழைத்துக் காண்பித்தார்கள். அக்கற்கள் ''லா இலாஹ இல்லல்லாஹு'' ''லாயிலாஹ இல்லல்லாஹு'' என்று திக்ரு செய்து கொண்டிருந்ததைக் கண்டு சஹாபி ஆச் சரியம் அடைந்துள்ளார்கள்.

வேடனிடம் சிக்கிய மான் அன்னாரிடம் முறையிட்ட கார ணத்தினால் மானுக்கு பிணையாக நின்று வேடனிடமிருந்து காப்பாற்றினார்கள், மரங்கள் அன்னாருக்கு முன் பணிந்து ஸலாமைத் தெரிவித்துள்ளது.

16. மலக்குகளை நேரடியாகவே பார்க்கக் கூடிய தன் மையைப் பெற்றிருந்தார்கள்.

17. அல்லாஹு தஆலாவைப் நேரடியாகப் பார்த்துப் பேசியுள்ளார்கள்.

18. நேரிடையாகவே சுவர்க்கம், நரகத்தைக் கண்டு வந்திருக்கிறார்கள்.

19. அர்ஷின் மீது பாதரட்சைகளுடனே நடந்து சென்றி ருக்கிறார்கள்.

20. மண்ணறையில் கொடுக்கப்படும் வேதனைகளை நிதரிசனமாகக் கண்டும், கேட்டும் உணரக் கூடிய தன்மை யைப் பெற்றிருந்தார்கள்.

21. எல்லா நபிமார்களுக்கும்முன் நபியாக இருந்திருக்கி றார்கள். அதேபோல் எல்லா நபிமார்களுக்கு பின்பும் நபியாக இருந்திருக்கிறார்கள். எனவே அவ்வல் நபி-ஆகிர் நபி என்ற சிறப்பைப் பெற்றிருந்தார்கள். ஆதம்(அலை) அவர்கள் படை பதற்கு முன் மண்ணுக்கும் தண்ணீருக்குமாக இருக்கும் சமயத் நபியாக இருந்திருக்கிறார்கள்.

22. இன்னும் பல அற்புதங்களைக் காட்டும் இயல்புடை யவர்களாக இருந்தார்கள். அதில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.



சந்திரனையே இரண்டாகப் பிளந்து காட்டினார்கள். அதன் ஒரு பகுதி அன்னாரின் அங்கியில் புகுந்து வெளிவந்து சென்றது. சந்திரன் பிளர்ந்தஅடையாளத்தை இன்றைய விண் வெளி விஞ்ஞானிகள் நிதர்சனமாக கண்டு உரைத்துள்ளனர்.

இரண்டு விரல்களுக்கிடையில் நீரூற்றை வெளிப்படுத்தி சஹாபாக்களுக்கு ஒலு செய்யும்படி செய்திருக்கிறார்கள். ஒரு சொம்பு பாலை ஒரு கூட்டமே வயிறார குடிக்கும்படி செய்துள் ளார்கள். இன்னும் எத்தனையோ அற்புதங்கள் மறைந்து கிடக்கின்றன.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய நூர் என்னும் பிரகாசத்தினால் உண்டானவர்கள், தன்னுடைய ருஹைத்தான் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களுக்கு ஊதினான். அவர்கள் ஒளியிலிருந்துபடைக்கப்பட்டதின் காரணமாகத்தான் அன்னாரின் மேனிக்கு நிழல்விழாதிருந்தது. இன்னும் அன்னா ரின் அற்புத சிறப்பிற்குக் காரணம் அந்த ஒளிதான். எனவே ஒளியிலிருந்து உருவான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனித கோலத்தில் ''நபியாக'' வழிகாட்ட வந்தார்கள், ஒவ் வொரு பொருளும் அதன் தனித் தன்மைகளை வெளிப்படுத்து வது அதன் இயல்பு. அது போல ஒளியிலிருந்து உருவான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு நடைமுறை களும், அசைவுகளும், பிரதிபலிக்கும் சலனங்களும் ஒளியினு டைய தன்மையைத்தான் பிரதிபலிக்கும். எனவே ஒளியாக இருந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத் எனும் நடைமுறைகளைப் பின்பற்றி அதுபோலவே நடக்க முற்படும் பொழுது நாமும் அன்னாரைப்போன்று ஒளியின் தன்மையைப் பெற்று பிரகாசிக்க தொடங்கி விடுவோம். அப்படி அந்த நூரே முஹம்மதிய்யாவினுடைய ஒளியின் பிரகாசம் நமது உள்ளங்க ளில் வந்து விட்டால் நமது நடை, உடை,பாவனை எல்லாமே அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானதாக மாறி விடும். ஏனென் றால் அல்லாஹ்விற்கு மிகப்பிரியமான அடியார்களில் முதலி டம் பெறுவர் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான். எனவே மனிதர்களுக்கு முன்மாதிரியாகவே அவர்களை

அனுப்பியிருக்கிறேன் என்று இறைவன் திருமறையில் கூறியிருக்கிறான்.

இறைவன் திருமறையில் கூறுகிறான்:

''அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புகிற உங்களுக்குரிய]அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடம் இருக்கிறது. அல்குர்ஆன் 33:21

எனவே யாருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று இறைவனே கூறுகிறானோ அந்த முன்மாதிரியை நாம் பின்பற்றிச் செல்லும் பொழுது அந்த முன்மாதிரியின் தன்மைகளும் பெற்று விடுகிறோம். எனவே நாமும் ஒளியாகவே மாறி இறைவனுடைய பேரொளியோடு ஒளியாக ஐக்கியமாகி விடக் கூடிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இதைத்தான் இரண்டறக் கலத்தல் என்னும் இறைக் காதல் நிலை (இஷ்கே இலாஹி) என கூறப்படுகிறது.

எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அற்புதங்களையும், குணநலப்பண்புகளையும் காணும் பொழுது அவர்கள் பெற்றிருந்த உயர்ந்த அந்தஸ்தை அல்லாஹ்விடம் யாரும் பெறவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

''நிச்சயமாக, நீங்கள் பார்க்காத ஒன்றை நான் பார்க்கிறேன். அன்றி, நீங்கள் செவியுறாத ஒன்றை நான் செவியுறுகிறேன். வானம் சுமையின் காரணமாகத் தடதடவென்று குமுறுகிறது. அது குமுறுவதற்குத் தகுந்த காரணமும் உள்ளது. அதில் நான்கு விரல் அளவு வானவர்கள் தங்களின் நெற்றியை வைத்து அல்லாஹ்வுக்குச் சிரம் பணியாத இடம் கிடையாது. அல்லாஹ்வின் மீதுஆணையாக, நான் அறிபவற்றை நீங்கள் அறிந்து விடின் குறைவாகவே சிரித்து அதிகமாக அழுவீர்கள். அன்றி, படுக்கைகளில் அமர்ந்து மனைவி மாரோடு அமர்ந்து ஒரு பொழுதும் சுக(போக)ம் அடைய மாட்டீர்கள். அழுது புலம்பி, அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோரி கானகங்களுக்குச்



சென்று விடுவீர்கள்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர். 'நிச்சயமாக ஒரு (பட்டுப்போன) மரமாக நான் இருந்து மக்கள் அதனை வெட்டி எடுத்துக்கொள்ளும் படியாக இருந்திருக்க கூடாதா என்று நொந்து கொண்டேன்' என்று அபூதர் (ரலி) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவரும்:- அவர்களே.

ஆதாரம்:- திர்மிதீ,

—★—

# 3. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் நாயகத் தோழர்களும்

''சஹாபாக்கள்''—இவர்களைத்தான் நாயகத் தோழர்கள் என்று குறிப்பிடுகிறோம். இந்தத் தோழர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்னால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த பெரு மக்கள். இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேருக்கு நேர் கண்டு பேசி, உரையாடி உறவாடியவர்கள். அன்னாருடைய ஒவ்வொரு அங்க அசைவுகளையும் கண்காணித்து வந்தவர்கள். ''வஹீ'' இறங்குவதை அவ்வப்போது அறிந்தவர்கள். திருமறையின் வசனங்கள் இறங்கக் கூடியக் காலத்திற்குள் வாழ்ந்தவர்கள். என்றுமே ]இணை பிரியாத பற்றுதலுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இணைந்து நின்றவர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு சிறு துன்பமென்றால் உயிரே போய் விடும்போல் துடிக்கும் இயல்புடையவர்கள். அன்னாரின் கால்களில் ஒரு சிறு முள் குத்திவிட்டாலும் தங்களுடைய இதயத்தில் ஈட்டி பாய்ந்து விட்டதைப் போல பதைபதைக்கும் தன்மையுடையவர்கள். எந்நேரமும் அன்னாரைச் சுற்றியே வட்டமடித்துக் கொண்டிருக்கும் பாசத்திற்குரியவர்கள். தங்களுடைய சொத்து சுகங்களை அன்னாருக்காக காணிக்கையாக சமர்ப்பித்தபெரியோர்கள். தங்களுடையஇன்ப சுகங்களைப் பெரிது படுத்திவாழாமல் அன்னாருக்காக ஏங்

கித் தவித்த புண்ணிய சீலர்கள், தங்களுடைய உயிரைக்காட்டிலும் அன்னாருடைய உயிர்தான் பெரிது என்று தங்களுடைய உயிரைத்துச்சமரக மதித்து உயிர்த்தியாகம் செய்த உத்தம புருஷர்கள். அன்னாருக்காக நாடு கடந்து கஷ்டங்களை மேற் கொண்டவர்கள். வசதியான வாழ்க்கைகளை உதறித் தள்ளிவிட்டு பள்ளியின் திண்ணைகளில் படுத்துறங்கிய மகான்கள். அன்னாருக்காக கட்டிய மனைவியரைக் கூட 'தலாக்' சொல்லிவிட்டு இன்னொரு தோழருக்கு மணமுடித்துக்கொடுத்து அகமகிழ்ந்த உத்தம சீலர்கள். சொத்து சுகங்களைத் துறந்துவிட்டு அன்னாரின் மேல் கொண்ட அன்பிற்காக தீனுக்காக எல்லாவற்றையும் காணிக்கையாக்கி இன்பம் கண்ட பெருமக்கள்தான் இந்த சஹாபாக்கள்.

எனவே தங்களுடைய வாழ்க்கையே அன்னாருக்காக அர்ப்பணிக்கத் தயாராக இருந்த உத்தம தோழர்கள்தான் இந்த சஹாபாக்கள். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு சொல்லையும் நம்பினார்கள். எதைச் சொன்ன பொழுதும் அதனை ஏற்றுக்கொண்டார்கள். அன்னாருடைய வார்த்தைகளை மீறி யாரும் நடக்கவில்லை. அந்த அளவிற்கு அன்னாரின் மீது மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தனர்.

எனவேதான் ஞானிகளுக்கெல்லாம் நாயகமாக விளங்கிய கௌஸ் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் ''சஹாபாக்களுடைய குதிரைகளின் கால்கள் எழுப்புகின்ற தூசிக்குக்கூட என்னுடைய அந்தஸ்து சமமில்லை'' என்று கூறியுள்ளார்கள். அந்த அளவிற்கு ஸஹாபாக்கள் அந்தஸ்தில் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் சஹாபாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேருக்கு நேர் பார்த்துள்ளார்கள் என்பதினாலேயே.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கண்டுவந்தார்கள். சஹாபாக்கள். அன்னாரின் ஒவ்வொருசலனத்திற்கும் காரணத்தைக் கேட்டு வந்தார்கள். ஒவ்வொரு விஷயத்தையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லிய பிறகே சஹாபாக்கள் அறியக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள். அப்படி இருக்கும் காலகட்டத்தில் சிலசமயங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடவடிக்கைகள் ஆச்சரியத்தைக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும். கையை திடீரென்று திருப்புவதோ, முகத்தின் நிறம் மாறுபடுவதோ, எழுந்து நிற்பதோ, மீண்டும் அமைத்து பேசுவதோ, திடீரென்று திரும்புவதோ இப்படி பலவகையான சலனங்கள் வெளியாவதுண்டு. அவைகளை ஏன் அப்படிச் செய்தனர் என்று சஹாபாக்கள் உடனே கேட்டுவிடுவதில்லை.



நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே தான் நடத்து கொண்டதற்குண்டான காரணங்களையும் சொல்லிவிடுவார்கள். சில சமயங்களில் சஹாபாக்கள் கேட்டபின்பு விளக்கம் கொடுப்பார்கள், அல்லது அவர்களுடைய முகக்குறிப்புகளை உணர்ந்து கொண்டு அவர்களாகவே தெளிவை உண்டாக்குவார்கள். அதிசயமான நடவடிக்கைகளைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்திருக்கும் சஹாபாக்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பதில் விளக்கத்திற்குப் பின்னால் புதிருக்குண்டான விடை கிடைத்த மகிழ்ச்சியில் பரவசமடைவார்கள், சஹாபாக்கள்.

அப்படிப்பட்ட அதிசயமான நடவடிக்கைகளின் புதிர்களின் விளக்கங்களைத்தான் இனி காணப்போகிறீர்கள். புதிருக்குண்டான விளக்கத்தைப் பெறும் பொழுது எந்த அளவிற்கு சஹாபாக்களுடைய ஈமான் என்னும் நம்பிக்கை பலப்பட்டதோ அதேபோல உங்களுடைய உள்ளமும், சந்தோஷமடைந்து ஈமான் பலப்படுவதற்காகவே இந்த தொகுப்புகளை தொகுத்து வழங்கியுள்ளோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ சந்தர்ப்பங்கள் எத்தனையோ விதமான அதிசய நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன. அவற்றையெல்லாம்

ஒன்று திரட்டி இங்கே கொடுப்பது சாத்தியமாகாது என்பதால் சில குறிப்பிட்ட முக்கியமான, பிரபல்யமான சம்பவங்களை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

வாருங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், அருமை சஹாபாக்களையும் கண்டு வருவோம்.

—★—

**முதல் சந்திப்பு**

## 4. மண்ணறையின்மீது ஈச்ச மரத்தின் கொப்பை நட்டியது ஏன்?

ஒருசமயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். தங்கள் அருமைத் தோழர்களான சஹாபாக்களுடன் சென்று கொண்டிருந்தனர். அவ்வமயம் இரண்டு கப்ருகளுக்கு (மண்ணறைகளுக்கு) அருகே சென்று கொண்டிருந்தபோது திடுக்குற்று திடீரென்று நின்று விட்டனர். அன்னாருடைய முகத்தினுடைய நிறமும் மாறி விட்டது.

அன்னாருடைய நடவடிக்கை சஹாபாக்களுக்கு ஆச்சரியமாகிவிட்டது. ஏன் நின்றனர்? எதற்காக நின்றனர்? என்று புரியாமல் நின்று விட்டனர் சஹாபாக்கள். சிறிது நேரம் சென்றதும் ஒரு சஹாபியை அழைத்து அருகே தெரிந்த பசுமையான ஈச்ச மரத்து கொப்பு ஒன்றைப் பறித்து வரச் சொன்னார்கள், அதே போல அந்த சஹாபியும் ஓடிச் சென்று காயாத பேரீச்ச மரத்தின் கொப்பு ஒன்றைக் கொண்டு வந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்தார். அதை அவர்கள் கையில் வாங்கி இரண்டாகப் பிளந்து ஒருபகுதியை ஒரு மண்ணறையின் மீதும், மற்றொரு பகுதியை இன்னொரு மண்ணறையின் மீதும், நட்டி வைத்தார்கள். அதன் பின் அவர்களுடைய முகத்தின் நிறம் எப்பொழுதும் போல் மாறி



விட்டது. காரணம் என்னவென்று புரியாமல் திகைத்து நின்றிருந்த சஹாபாக்களுக்கு புதிரின் விளக்கத்தைக் கொடுத்து புரியவைத்தார்கள்.

அதாவது இந்த மண்ணறையில் அடக்கப்பட்டிருக்கும் இரண்டு மனிதர்களுக்கும் வேதனை கொடுக்கப்படுகிறது. அதனால் இவர்கள் இருவரும் பெரும் பாவத்தைச் செய்தற்காக வேதனை செய்யப்படவில்லை: இருவரில் ஒருவர் கோள் மூட்டும் பொருட்டு அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தார். இன்னொருவர் தம் சிறு நீரை விட்டும் துப்புறவாக இருந்ததில்லை. அதனால் தான் இவர்களுடைய கப்ருகளின் மீது காயாத பேரீச்சை மரத்தின் கொப்புகளை நட்டிவைத்தேன். அதனால் அவர்களுடைய வேதனைகள் குறையக் கூடும். இவைகள் காயாமல் இருக்கும்வரை என்ற கருத்தை வெளியிட்டார்கள். அதனைக் கேட்ட சஹாபிகளுக்கு தெளிவுண்டாயிற்று.

ஆதாரம்;- இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்த ஹதீஸ்,

பதிவாக்கப்பட்ட நூற்கள்;- புகாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ.

—★—

**உ-ஆவது சந்திப்பு**

## 5. இரண்டுமுறை துக்கத்தை வெளிப்படுத்தியதற்கு காரணம் என்ன?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நான்கு பெண் மக்களில் ஒருவரான ஹஜ்ரத் ஜைனப் (ரலி) அவர்கள் மரணமடைந்த சமயத்தில் மய்யித்தை மண்ணறையில் வைத்து

அடக்கம் செய்யப் பட்ட பொழுது சஹாபாக்களும் கூடியிருந் தனர். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்க ளில் கண்ணீர் வழிய துக்கத்தால் அழுது கொண்டிருந்தனர். பிறகு திடீரென்று மீண்டும் அழுதார்கள். இரண்டு முறை துக்கத்தை வெளிப்படுத்தி அழுததற்குக் காரணம்என்னஎன்று தெரியாமல் சஹாபாக்கள் திகைத்து நின்றிருந்தனர்.

அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவலை யோடும் அல்லாஹ்விடம் ''துஆ'' செய்தார்கள். நீண்ட நேரம் ''துஆ'' செய்த பின் அவர்களுடைய கவலைக் கீறல் கள் மறைந்தன. அன்னாரின் நடவடிக்கைகளின் விளக்கத்தை யாரும் புரியாமல் மௌனமாக நின்றிருந்தனர் சஹாபாக்கள். அவர்களின் முகக் குறிப்புகளை அறிந்து கொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் விளக்கத்தைக் கொடுத் தார்கள்.

''அதாவது எனது அருமை மகளை மண்ணறையில் வைத்து மண்ணைப் போட்டு மூடியதும் என்னால் துக்கத்தை தாங்க முடியாது அழுதேன். அதற்குப்பின் மண்ணறையில் வேதனை கொடுக்கப் படுவதால் என்னுடைய மகளின் அல றல் சப்தத்தைக் கேட்டு திடுககுற்று மீண்டும் அழுதேன். சிறு நீர் துப்புறவு சரியாக இல்லாத காரணத்திற்காகவே என்னு டைய மகளுக்கு மண்ணறையில் வேதனை கொடுக்கப்பட்டது. மண்ணறையின் வேதனையை அகலும்படி அல்லாஹ்விடம் ''துஆ'' செய்தேன். என்னுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு வேதனையை நீக்கிவிட்டான்'' என்ற கருத்தைக் கூறிய பொழுதுதான் சஹாபாக்களுக்கு தெளிவு உண்டா யிற்று.

—★—

## 3-ஆவது சந்திப்பு

# 6. கோவேறு கழுதை மிரண்டது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ நஜ்ஜாருடைய தோட்டத்தில் தங்கள் கோவேறு கழுதையின்மீது ஏறி அமர்ந் திருந்தார்கள். அப்பொழுது சில சஹாபாக்களும் கூட இருந் தனர். திடீரென்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந் திருந்த கோவேறு கழுதை மிரண்டது. அதனால் கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர் களே கீழே விழுந்துவிட இருந்தார்கள். அந்த அளவிற்கு அது நிற்கும் இடத்திலிருந்து கால்களைத் தூக்கி மிரண்டது. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதையோ கண்டு கொண்டவர்களைப் போல கோவேறு கழுதையை அமைதிப் படுத்தி சற்று ஓட்டிச் சென்று நிறுத்தினார்கள், சஹாபாக் களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அதன்பின் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக் கம் கொடுத்து புரியாத புதிருக்கு விடை தெரியும்படி செய் தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்றிருந்த இடத் திற்கருகில் ஐந்து அல்லது ஆறு கப்ருகள் இருந்தன. ''இந்த கப்ருகளில் இருப்பவர்களை உங்களில் எவரேனும் அறிந்திருக் கிறீர்களா?' என்று சஹாபாக்களைப் பார்த்துக் கேட்டனர், அதற்கு ''நான் அறிவேன்'' என்று ஒரு சஹாபி பதிலளித் தார். அதனைக் கேட்டதும் ''அவர்கள் எப்பொழுது இறந் தனர்?' என்று கேட்டனர். அதற்கு ''இணை வைக்கும் காலத் தில்'' என்று பதில் அளித்தார்.

எனவே ''நிச்சயமாக இந்தக் கூட்டத்தினர் தங்கள் கப்ரு களில் வேதனைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். நீங்கள் (கப்ரில் வேதனை செய்யப்படுவதைக் கண்டு) உங்களில் இறந் தவர்கள் அடக்கம் செய்வதைக் கைவிட்டு விடாதிருப்பீர்கள்

என்ற அச்சம் எனக்கு இல்லாதிருப்பின் நான் அல்லாஹ்விடம் இறைஞ்சி, கப்ரிலிருந்து வேதனையை நான் செவியுறும் விதமாக உங்களையும் செவியுறச் செய்திருப்பேன்'' என்று கூறி பின்னர் 'நீங்கள் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள்' என்று கூறினர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

எனவே கோவேறுகழுதை மிரண்டதற்குக் காரணம் அந்த கப்ருகளில் மய்யித்துகளுக்கு வேதனை தரப்படும் பொழுது அலறும் சப்தத்தைக் கேட்டதேயாகும் என்பதை அறிந்து கொண்டார்கள் சஹாபாக்கள்.

மேற்கண்ட சம்பவத்தின் அடிப்படை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் ரிவாயத் செய்த ஹதீஸ் ஆகும்.

ஆதார நூல்; திர்மதி

—★—

# 7. மண்ணறைகளில் வேதனை

மண்ணறைகளில் வேதனை கொடுக்கப்படுவது உண்மை தான். அந்த வேதனைகளின் போது அலறும் சப்தத்தை மனிதர்கள் ஜின்களைத் தவிர மற்ற எல்லா மிருகங்களும் அறிந்துகொள்கின்றன. எனவேதான் சிலர் கப்ருகளுக்குப் பக்கத்தில் ஏதேனும் பிராணிகள் (அதாவது நாய், பன்றி, கழுதை, எருமை, பூனை போன்றவைகள்) சென்றால் சில சமயங்களில் அவைகள் மிரண்டு ஓடுவதைக் காணலாம். ஏனென்றால் அவைகளுக்கு அந்த சப்தம் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

''கப்ருடைய வேதனை உண்மைதான். நிச்சயமாக மய்யித்துகளுக்கு அவருடைய கப்ருகளில் வேதனை செய்யப் படுகிறது. அதனை மிருகங்களும் செவியுறுகின்றன'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர். (ஹதீஸின் ஒரு பகுதி)

—அறிவிப்பவர்; ஆயிஷா (ரலி)
ஆதாரம்; புகாரீ, முஸ்லிம், நஸயீ



மேலும் ஒரு ஹதீதை உங்களுடைய ''தெளிவுக்காக'' இங்கே கொடுக்கிறேன்.

''ஓர் அடியான் (இறந்த பின்னர்) அவர் கப்ரில் வைக்கப் பட்டு அவரை விட்டும் அவருடைய தோழர்கள் திரும்பிவிட்டால் அவர் அவர்களுடைய காலடிகளின் சப்தத்தைக் செவியுறுகிறார். அவர்கள் திரும்பிவிட்டபின் இரு வானவர்கள் அவரிடம் வந்து (முன்கர், நகீர் என்ற வானவர்கள்) அவரை அமரச் செய்து, 'நீர் இந்த மனிதர் முஹம்மது (ஸல்) அவர்களைப்பற்றி என்ன கூறிக்கொண்டிருந்தீர்?'' என்று அவரிடம் வினவுவர். அவர் இறை நம்பிக்கையாளராக இருப்பின், 'நிச்சயமாக, அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாரும் அவனுடைய தூதருமாவார்கள் என்று நான் சான்று பகர்கிறேன்'' என்று விடையளிப்பார். அப்பொழுது அவர்கள் அவரிடம் 'நரகத்தினுள் உம்முடைய இருப்பிடத்தை (ச்சற்றுக்) கவனியும். இதற்குப் பதிலாக சுவனபதியில் உமக்கு இருப்பிடத்தை அல்லாஹ் அளித்திருக்கிறான்' என்று கூறுவார்கள். எனவே அவர் அவ்விரண்டையும் பார்க்கிறார். அவருடைய கப்ரில் அல்லாஹ் சுவனபதியின் பக்கம் துவாரம் ஏற்படுத்திவிடுகிறான்.

ஆனால் அவன் நிராகரிப்பவனாகவோ நயவஞ்சகனாகவோ இருப்பின், ''நான் (யாதொன்றும்) அறியேன். மக்கள் கூறி வந்த வண்ணம் நானும் கூறிவந்தேன்'' என்று கூறுவான். அதற்கு அவ்விருவரும் 'நீர் யாதும் அறிய மாட்டீர்; எதனையும் நீர் படித்ததுமில்லை' என்று கூறியபின் அவனுடைய இரு காதுகளுக்கிடையில் (தங்களின் கைத்)தடியால் ஓர் அடி அடிப்பார்கள். அப்பொழுது அவன் பெருங்குரலெடுத்து அலறுவான். அதனை மனிதர்களும், ஜின்களும் தவிர அவனை அடுத்திருக்கும் ஏனைய அனைத்தும் செவியுறும்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

— அறிவிப்பவர்: அனஸ் (ரலி)
ஆதாரம்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ

எனவே இதற்கு முன் கூறப்பட்ட மூன்று சம்பவங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் மண்ணறையின் வேதனை உண்டு என்பதே. மேலும் மண்ணறைகளின் மீது பசுமையான குச்சிகள் நட்டு வைத்தால் மண்ணறையின் வேதனைகள் குறையும் என்பதும் வெளிப்படுகிறது.

அதற்குக் காரணம் உலகிலுள்ள பசுமையான எல்லா தாவரங்களும் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்துகொண்டிருக்கின்றன. அதுவும் லாஇலாஹ இல்லல்லாஹு என்ற திக்ரைத்தான் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

''ஒரு மரத்திலிருந்து ஒரு இலையானது பழுத்து கீழே உதிர்வதில்லை. எதுவரையென்றால் அந்த இலை தன்னுடைய திக்ரை நிறுத்தினாலன்றி. அதேபோல ''எந்தவொரு மீனும் வலையில் சிக்குவதில்லை; லாஇலாஹ இல்லல்லாஹு என்று திக்ர் செய்து கொண்டிருக்கும் வரை. அது திக்ரை மறந்தால்தான் வலையில் சிக்குகின்றன'' என்ற கருத்துக்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை ஹதீஸ் கிரந்தங்கள் சான்று பகர்கின்றன. எனவே ஒரு மரத்திலிருந்து ஒரு இலை பழுத்து கீழே விழுகிறதென்றால் அது இறைவனுடைய திக்ரை நிறுத்திய தற்குப் பின்பே என்று அறியமுடிகிறது. எனவே மண்ணறைகளின்மீது பசுமையான கொப்புகளை நட்டி வைக்கப்படும் போது இந்த' இலைகள் சொல்லுகின்ற திக்ரின் காரணமாக மண்ணறையின் வேதனையை அல்லாஹ் குறைத்துவிடுகின்றான். இதன் காரணமாகத்தான் என்னவோ மய்யித்தை மண்ணறையில் வைத்து அடக்கப்பட்டதின்பின் அடையாளமாக இருக்கக் கருதி பசுமையான சொப்புகளை தலைப்புறம் ஒன்று, கால்புறம் ஒன்றுமாக நட்டி வைக்கிறார்கள். இதனுடைய தத்துவத்தைப் புரிந்தோ புரியாமலோ செய்துவருகின்றனர்.

மண்ணறையின்மீது வளர்ந்துள்ள செடி, கொடிகள், புல் பூண்டுகள் அநாவசியமாகப் பறிக்கவோ, அப்புறப்படுத்தவோ கூடாது, ஏனென்றால் அப்படி பிடுங்கிவிட்டால் திக்ரின்



பலன் கிடைக்காமல் போய்விடும். எனவே தான் அதற்கு பெரியோர்கள் தடை விதிக்கிறார்கள்.

இறந்தோருக்காக நன்மைகள் செய்து ! ''ஈஸாலெ தவாப்'' பை எத்தி வைத்தாலும் மண்ணறையின் வேதனைகள் குறைக்கப்படும்.

...★...

## 4-ஆவது சந்திப்பு

# 8. ஏன் சிரித்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னிலையில் ஒரு மனிதர் உணவை உண்ண ஆரம்பித்தார். அந்த மனிதர் உணவை உண்ண ஆரம்பிக்கும்பொழுது ''பிஸ்மில்லாஹ்'' எதையும் சொல்லாமலேயே ஆரம்பித்தார். அவர் உணவை சாப்பிட்டுக்கொண்டிருப்பதையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். சில சஹாபாக்களும் நபி நாயகம் (ஸல்) ஏன் அவ்விதம் அந்த மனிதரை வழக்கத்திற்கு மாறாக பார்த்துக்கொண்டிருக்கின்றனர் என்ற காரணம் புரியாமல் அவர்களும் அமைதியாக அமர்ந்திருந்தனர். அந்த மனிதர் உணவைத் திருப்தியான முறையில் உண்டு முடியும் தருவாயில் தான் ''பிஸ்மில்லாஹ்'' கூறாமல் சாப்பிட்டதை அறிந்து வெட்கப்பட்டார். கடைசி உணவுக் கவளத்தை எடுத்து சாப்பிடும் பொழுது ''பிஸ்மில்லாஹி அவ்வலஹு வ ஆகிரஹு'' என்று கூறிவிட்டு வாயில் போட்டார். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திடீரென சிரித்தார்கள். காரணம் என்னவென்று புரியாமல் எல்லோரும் விழித்தனர். சாப்பிட்டு முடித்தவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. ஒரு வேளை தாம் யாதேனும் தப்பாகவோ, அசிங்கமாகவோ நடந்துகொண்டு விட்டோமோ என்று கூட்டத்தில் சந்தேகப்பட வைத்தது. எதற்காக அப்படி

சிரித்தீர்கள் என்று கேட்க நினைத்த போதிலும் கேட்கத் தயங்கினார்கள். அதற்குள் குறிப்பால் உணர்ந்துகொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அந்த புதிரின் முடிச்சை அவிழ்த்தார்கள்.

''அவர் சாப்பிடும்பொழுது பிஸ்மில்லாஹ் கூறாமல் சாப் பிட ஆரம்பித்தார். எனவே ஷைத்தானும் அவருடன் சேர்ந்து சாப்பிட ஆரம்பித்தான். ஆனால் இறுதியாக ''பிஸ்மில்லாஹி அவ்வலஹூ வ ஆகிரஹூ'' என்று கூறியவுடன் அவன் தன் வயிற்றில் இருந்தவற்றையெல்லாம் வாந்தி எடுத்துவிட்டான். அதைப் பார்த்து எனக்கு சிரிப்பு வந்துவிட்டது'' என்றுசொன் னார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அதனைக் கேட்ட சஹாபாக்களும் சிரித்து விட்டனர்.

(இந்த சம்பவம் அபூதாவூதில் பதிவாக்கப்பட்ட உமைய துப்னு மக்ஷீ (ரலி) அவர்கள் அறிவித்த ஹதீதை அடிப்படை யாகக் கொண்டதாகும்.)

''உங்களில் எவரேனும் உணவருந்த நாடினால் 'பிஸ்மில் லாஹ்' ஓதவும் ஆனால் துவக்கத்தில் (ஓத) மறந்து விடின் இறுதியில் 'பிஸ்மில்லாஹி ஃபீ அவ்வலிஹீ வ ஆகிரிஹி' என்று கூறவும்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)
ஆதாரம்: அபூதாவூத், திர்மிதி

—★—

### 5-ஆவது சந்திப்பு

## 9. ஜனாஸாவைக் கண்டதும் எழுந்து நின்றது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் ஒரு நாள் ஓரிடத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த வழியாக ஒரு யூதரின் ஜனாஸா எடுத்துச்



செல்லப்பட்டது. அதனைக் கண்டதும் உடனே எழுந்து நின்று விட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்தத் திடீர் சலனம் சஹாபிகளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. எதற்காக? ஏன்? எழுந்து நின்றனர் என்ற காரணம் புரியாமல் இருந்தனர். ஜனாஸா தங்களைக் கடந்து சிறிது தூரம் சென் றதும் மீண்டும் முன்புபோல அமர்ந்தவர் திடீர் நடவடிக்கை யின் புதிரையும் அவிழ்த்தார்கள். ''யாரசூலல்லாஹ் தாங்கள் யூதர்களின் ஜனாஸாவுக்கும் எழுந்து மரியாதை செலுத்த வேண்டுமா?'' என்று ஒரு சஹாபி கேட்கிறார். ''நான் அந்த யூத ஜனாஸாவுக்காக எழவில்லை. நிச்சயமாக நான் அதனு டன் இருந்த வானவர்களுக் (கு மரியாதை செய்வதற்) காகத் தான் எழுந்தேன் என கூறினார்கள்.

(இந்த சம்பவத்தின் அடிப்படை நஸயீயில் பதிவாக்கப் பட்ட முஹம்மது ஸீரீன் அறிவித்த ஹதீஸை ஆதாரமாக கொண்டது.)

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுடன் சென்றார்கள். அப்பொழுது சிலர் வாகனங்களில் வருவதைக் கண்ட அவர்கள், உங்களுக்கு நாணமில்லையா? நிச்சயமாக அல்லாஹ்வுடைய வானவர்களும், கால் நடையாகத்தான்வரு கிறார்கள்; நீங்களோ வாகனங்களின் முதுகின்மீது வீற்றிருக் கிறீர்களே! என்று கூறினர்.''

அறிவிப்பவர்: ஸவ்பான் (ரலி)
ஆதாரம்; அபூதாவூத், திர்மிதி

## 6-ஆவது சந்திப்பு

# 10. திடீரென்று எழுந்து வெளியே சென்றது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது யூதர்கள் பொறாமைக் கண் கொண்டு நோக்கினர். தங்களுககெதிராக இஸ்லாம் வளர்வதைக்கண்டு வெதும்பினர். வஞ்சினம் கொண்ட யூதர்கள் ஒரு முக்கியமான பேச்சு வார்த்தைக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு விருந்துக்கு அழைத்தனர். கூடவே ஸஹாபாக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தனர். எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த விருந்தில் கலந்து கொள்ள குறிப்பிட்ட விருந்து மண்டபத்திற்கு சஹாபாக்களுடன் சென்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் தங்கள் அருமைத்தோழர்களுடன் தங்களில்லம் வந்துள்ளதைக் குறித்து மிகவும் சந்தோஷப்பட்டு அன்புடன் வரவேற்று தயாராகப் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமரும்படி செய்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முக்கியமாக ஒரு குறிப்பிட்ட ஆசனத்தில் அமரும்படி செய்தனர்.அந்த யூதர்கள் ஆசனங்களுக்கு முன்பு போடப்பட்டிருந்த மேஜையின மீது பலவகையான பழங்கள், உணவுப் பண்டங்கள் கொண்டு வந்து வைத்திருந்தனர். ஆனால் இன்னும் விருந்தை ஆரம்பிக்கவில்லை, நேரம் அதிகமாக சென்று கொண்டேயிருந்தது. ஆனால் யூதர்கள் யாரும் தங்களோடு அமர்ந்து பேசவோ, விருந்து உண்ணவோ செய்யவில்லை. ஏதோவொரு காரணத்திற்காகத் தாமதப்படுத்திக்கொண்டிருந்தார்கள். சில யூதர்கள் அங்கு மிங்கும் ஜாடைமாடையாகப் பேசிக்கொண்டு நின்றுருந்தார்கள்.

சஹாபாக்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. விருந்துக்கு ஏற்பாடு செய்து விட்டுத் தாமதப்படுத்துவதற்குக் காரணம்



என்ன என்பது புரியாமலிருந்தனர். எனினும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அமைதியாக அமர்ந்திருக்கிறார்களே என்று எண்ணி ஆறுதலடைந்திருந்தனர். திடீரென்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து விறுவிறுவென வேகமாக வெளியெ சென்று விட்டார்கள். ஏன் இவ்விதம் திடீரென்று எழுந்து வெளியே சென்று விட்டார்கள் என்ற காரணம் ஒன்றும் புரியாமல் சஹாபாக்கள் வியப்படைந்திருந்தார்கள். அந்த யூதர்களும் ஒன்றும் தெரியாததுபோல நின்று கொண்டிருந்தனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்றதற்குப் பின்னாலேயே சஹாபாக்களும் அந்த விருந்தில் கலந்து கொள்ளாமல் கலைந்து சென்றனர். ஆனால் என்ன காரணத்திற்காக நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் அவ்விதம் நடந்துகொண்டார்கள் என்ற காரணத்தை அறிய நேராக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தேடியே சென்றனர். வந்திருந்த தோழர்களின் குறிப்பை உணர்ந்து கொண்டவர்களாய் புதரின் முடிச்சை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அவிழ்த்தனர்.

யூதர்கள் ஒரு நல்ல எண்ணத்தோடு பேச்சுவார்த்தைக்கோ விருந்திற்கோ அழைக்கவில்லை. என்னைக் கொல்ல வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடுதான் அழைத்திருந்தார்கள். அவர்களுடைய சதித்திட்டத்தை ஜிப்ரீல் (அலை) அவர்கள் வெளிப்படுத்திவிட்டார்கள். முஹம்மதே அதோ மேலே திரும்பிப்பாருங்கள்! உங்களின் மீது உருட்டிக் கொல்வதற்காகப் பெரிய பாறாங்கல்லை வைத்திருக்கிறார்கள் என்று என்னிடம் கூறினார்கள். அந்த செய்தியைக் கேட்டதும் நான் அங்கிருந்து உடனே புறப்பட்டுவிட்டேன் என்ற கருத்தைச் சொன்னார்கள். சஹாபாக்களுக்குமேலும் வியப்பை உண்டாக்கியது.

—★—

## 7-ஆவது சந்திப்பு

# 11. "ருக்னுல் யமானில்" ஒரு குறிப்பிட்ட துஆவை மட்டும் ஓதியது ஏன்?

இறையில்லமான ''கஃபா''வுக்கு சிறப்பான மூலைகள் இருககின்றன. அந்த ஒவ்வொரு மூலைக்கும் ஒவ்வொரு பெயரைச் சூட்டி சிறப்பாக்கப்பட்டுள்ளது. ''ஹஜருல் அஸ்வத்'' என்னும் சுவர்க்கத்துக் கல் பதிக்கப்பட்டிருச்கும் ஒரு மூலை தென்கிழக்கு மூலை. ருக்னுல் யமானி' என்ற குறிப்பிடப்படும் மூலை தென்மேற்கு மூலை. மேலும் ஹஜருல் அஸ்வத்திற்கும் கஃபாவின் வாயிலுக்கும் இடையிலுள்ள மத்தியிலுள்ள பகுதிக்கு ''முல்தஜிம்'' என்று குறிப்பிடுகிறார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் கஃபத்துல்லாஹ்வை தவாஃபு செய்யும் பொழுது பல வகையான துஆக்களை பல்வேறு இடங்களில் செய்து வந்தார்கள். ஆனால் ஒவ்வொரு தடவை ''ஹஜருல் அஸ்வத்'' என்னும் மூலையை நெருங்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட துஆவையே ஓதிக்கொண்டிருந்தார்கள்.

அந்த துஆவானது:

'அல்லாஹும்ம இன்னி அஸ்அலு(க்)கல் அஃப்வ வல் ஆபிய(த்)த வல்முஆபா(த்), பித்தாரைன்.

பொருள்: ''இறைவா! ஈருலக நல்வாழ்வையும், நல் சுகத்தையும், மன்னிப்பையும் உன்னிடம் கேட்கின்றேன்.''

இதனைக் கண்ட சஹாபாப் பெருமக்களுக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. கஃபத்துல்லாவை தவாபு செய்யும்பொழுது பல்வேறு தஸ்பீஹ் துஆக்களை செய்து அந்த குறிப்



பிட்ட மூலைக்கு வந்தவுடன் ஒரே மாதிரியான ''துஆ''வைத் திரும்பத் திரும்ப கூறுவதற்குக் காரணமென்ன எனும் எண்ணம் ஒவ்வொரு சஹாபியினுடைய உள்ளத்திலும் எழுந்தது. சஹாபாக்களின் முகக் குறிப்புகளை அறிந்துகொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புதிருக்குண்டான விளக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

''நான் பல்வேறு இடங்களில் பல்வேறு துஆக்களை ஓதினாலும் இந்த ருக்னே யமானில் மட்டும் இந்த ஒரே துஆவை ஓதுவதற்குக் காரணம் இந்த துஆவிற்கு ''ஆமீன்'' சொல்ல எழுபது மலக்குகளை அல்லாஹு தஆலா நியமனம் செய்திருக்கிறான். எனவே தான் அந்த துஆவை மட்டும் அங்கு திரும்பத் திரும்ப ஓதினேன்' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியிட்டார்கள். சஹாபிகளின் மேனி சிலிர்த்தது.

—★—

## 6.ஆவது சந்திப்பு

# 12. "முஜ்தலிபா"வில் சிரித்தது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபாத் மைதானத்தில் இறைவன் பால் ''துஆ'' செய்தார்கள். அதாவது ''இறைவா'' எனது உம்மத்துகளில் ஹாஜியாக வந்துள்ள அனைத்து ஹாஜீகளின் எல்லா வகையான பாவங்களையும் மன்னிப்பாயாக!'' என்று துஆ கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா ஹாஜிகளின் எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிட்டேன். ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குச் செய்த அநீதிகளைத் தவிர' என்று கூறினான்.

அதனைக் கேட்டதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'இறைவா! நீ நாடினால் அந்த அநீதமிழைத்த மனிதரையும் மன்னித்து விடலாமே' என்று மீண்டும் முறையிட்டார்கள்.

ஆனால் அதற்கு இறைவனிடமிருந்து எவ்வித பதிலும் வர வில்லை.

அரஃபாத்தில் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் முடித்துவிட்டு ''முஜ்தலிபா''வுக்கு வந்தார்கள். அங்கு ஹஜ்ஜின் கிரிகைகளையெல்லாம் முடித்து விட்டபின் அர ஃபாத்தில் கேட்ட ''துஆ'' வையே மீண்டும் இறைவனிடம் கேட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நீண்ட இறைஞ்சுதலின் காரணமாக அல்லாஹு தஆலா அன்னா ரின் ''துஆ''வை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தான். ஒரு மனிதன் சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வுக்கு மாற்றமான பாவங்களை செய்திருந்தாலோ அல்லது சிருஷ்டிக்கு செய்யப் பட்ட அதாவது ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் மீது புறம், அநீதி செய்திருந்தாலோ அந்த பாவங்கள் யாவை யும் மன்னிக்கப்பட்டுவிடும் என்று இறைவன் கூறினான். அதனைக் கேட்டதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்து விட்டனர்.

அருகே இருந்த சஹாபாக்களுக்கு ஆச்சரியமாகி விட்டது. ''துஆ'' செய்து கொண்டிருந்தவர் ''துஆ'' வை முடித்ததும் இவ்விதம் சிரிப்பதற்குக் காரணம் என்னவென்றால் புரியாமல் ஆச்சரியத்துடன் அன்னாரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அருமைத் தோழர்களின் திகைப்பைப் புரிந்து கொண்ட நபி கள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த புரியாத புதிரின் காரணத் தைச் சொன்னார்கள்.

''ஒரு மனிதன் இன்னொரு 'மனிதனுக்குச் செய்யும் அநீ தத்தை மன்னிக்கும் படி அரஃபாத்தில் இறைவனிடம் கேட் டேன். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முஜ்தலிபா வான இந்த இடத்திலும் அதே ''துஆ'' வைக் கேட்டேன். இறைவன் தன்னுடைய அடியார்களின்மீது இரக்கப்பட்டு என்னுடைய துஆவை ஏற்றுக்கொண்டுவிட்டான். அதனைக் கண்டு ஷைத்தான் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டு :'என் நஷ்டமே, என் நஷ்டமே'' என்று கூறிக்



கொண்டு ஓடுகிறான். இதனைப் பார்த்ததும் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. என்ற கருத்தைச் சொன்னார்கள். சஹாபாக் களுடைய ஈமான் பொங்கி வழிந்தது.

—★—

### 9-ஆவது சந்திப்பு

## 13. அண்ணல் நபி (ஸல்) ஆச்சரியமுற்றது ஏன்?

ஸஃதுப்னுமுஆது (ரலி) அவர்களுடைய மரணச் செய்தி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகவும் கவலைக்குள்ளாக் கியது. அவர்கள் மரணமடைந்த அன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வானத்தின் பக்கம் தலையை உயர்த்திய வர்கள் மிகவும் ஆச்சரியமுற்றார்கள். அருகில் சுற்றியிருந்த சஹாபாக்களுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன காரணத் திற்காக இவ்விதம் பெரிதும் வியப்படைந்தவராக ஆனார்கள் என்பது தெரியாமல் அதை நேரிடையாகக் கேட்பதற்குத் தயக்கப்பட்டு நின்று கொண்டிருந்தனர். முகக் குறிப்பை உணர்ந்துகொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புதிருக் குரிய விடையைப் பகர்ந்து சஹாபாக்களுக்குத் தெளிவை உண்டாக்கினார்கள்.

ஸஃதுப்னு முஆது (ரலி) அவர்களின் காரணமாக அல் லாஹ்வுடைய ''அர்ஷு'' (மகிழ்வுற்று) அசைந்தது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதனைக் கேட்ட சஹாபிகளின் மேனி புல்லரிக்க கண்களில் வரையிட்டது.

ஆதாரம்: ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸ் புகாரீ, முஸ்லிம், திர்மிதியில் பதிவாக்கப் பட்டுள்ளதின் அடிப்படையாகக் கொண்டது.

—★—

### 10-ஆவது சந்திப்பு

## 14. ஜனாஸா லேசாக இருந்த தற்குக் காரணமென்ன?

ஸஃதுப்னு முஆதா (ரலி) அவர்கள் இறந்தபின் குளிப் பாட்டி, கபனாடை அணிவித்துஜனாஸாவில் வைக்கப்பட்டது. அன்னாரின் ஜனாஸாவைத் தூக்கிச் செல்வதற்காக பெரும் பெரும் சஹாபாக்களும் அங்கு குழுமியிருந்தனர். ஜனா ஸாவை தூக்கிச் செல்லும் பொழுது அது மிகவும் லேசாக இருந்தது. ஜனாஸாவிற்குள் மய்யித்தே இல்லாததுபோல ஜனாஸா லேசாக இருந்ததைக்கண்டு சஹாபாக்களும் ஆச் சரியமுற்றனர், ''ஜனாஸா ஏன் இவ்வளவு லேசாக இருக் கிறது.'' என பேசிக்கொண்டனர்.

அதற்குக் காரணம் பனூகுரைளரக்களைக்கொலை செய்ய வும் கைது செய்யவும் கட்டளையிட்டதற்காக இருக்கலாமல் லவா? என்று கிண்டலாக, எள்ளி நகையாடியவர்களாக அந்த கூட்டத்தில் சென்ற முனாஃபிக்குகள் (நயவஞ்சகர்கள்) கூறிக்கொண்டிருந்தனர். இந்த செய்தியைக் கேட்ட சஹா பாக்களின் மனம் புண்பட்டது. இதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கேட்டு மனம் வேதனையடைந்தார்கள். அதோடு நின்று விடாமல் அன்னாரின் ஜனாஸா லேசாக இருப்பதற்குண்டான புதிரின் காரண விளக்கத்தையும் அங் கேயே வெளியிட்டார்கள். ''ஸஃதுப்னு முஆதா (ரலி) அவர் களுடைய இந்த ஜனாஸா லேசாக இருப்பதற்குக் காரணம் இந்த ஜனாஸாவை நிச்சயமாக வானவர்கள் சுமந்து செல் கின்றனர்'' என்ற கருத்தை வெளியிட்டார்கள். நயவஞ்ச கள் தலை குனிந்து வெட்கமடைந்தனர்.

ஆதாரம்: அனஸ் (ரலி) அவர்கள் ரிவாயத் செய்ததாக திர் மதியில் பதிவாக்கப்பட்ட ஹதீதின் ஆதாரமாகக்கொண்டது.



### 11-ஆவது சந்திப்பு

## 15. சுவர்க்கத்தில் பிலால் (ரலி)யின் காலடி ஓசைக்குக் காரணம் என்ன?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''மிஃராஜ்'' இரவில் விண்ணேற்றம் சென்று வந்தார்கள். ''ஒரே இரவுக்குள் விண் ணுக்குச் சென்று சுவர்க்கம், நரகத்தைக் கண்ணுற்றபின் அல் லாஹ்விடமும் நேரிடையாகவே பேசி வந்துள்ளார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் ''அது உண்மை தான்; நான் நம்புகிறேன்'' என்று முதன் முதலாக மன உறுதியுடன் கூறிய சஹாபி தான் அபூபக்கர் (ரலி). எனவே அவர்கள ''சித்தீக்'' (உண்மையாளர்) என்ற பட்டத்தைப் பெற்றார்கள். மிஃராஜ் சென்று வந்த சூட்டோடு நபிகள் நாய கம்(ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களைத் தேடினார்கள். காரணம் அவரை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்ற ஆர் வம் கொண்டிருந்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், நபி கள் நாயகம் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களை அவசர மாகக் காண விரும்பிய செய்தியை பிலால் (ரலி) அறிந்து ஓடி வந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காண என்ன கார ணத்திற்காக தன்னை இவ்வளவு துரிதமாகத் தேடுகிறார்கள் என்ற கேள்விக்குறி அலையாக எழுந்தது. எனினும் பொங்கி எழும் உணர்வுகளை அடக்கிக்கொண்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு முன் ஹாஜரானார்கள். பிலால் (ரலி) அவர் களைப் பார்த்ததும் ஏதோ ஒரு புது மனிதரைப் பார்த்தது போன்று ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். ஏன்? எதற்காக அப்படி பார்க்கிறார் என்ற காரணமும் தெரியாமல் விழித்துக் கொண்டு நின்றிருந்தார் பிலால் (ரலி). நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்முறுவலோடு பிலால் (ரலி) அவர்கள் அருகில்அழைத்தார்கள். அவரும் நெருங்கி வந்தார். பக்கத் தில் வந்ததும் ''பிலாலே! உமக்கு பெரும் நன்மையை விளை விக்கும் என்று நம்பிய எச்செயலை இஸ்லாத்தில் நீர் செய்தீர்

என்பதை எனக்கு அறிவியுங்கள்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். பிலால் (ரலி) அவர்களுக்கு என்ன சொல்வதென்றே முதலில் தோன்றவில்லை. மீண்டும் ''பிலாலே! எதன் காரணமாக, நீர் என்னைச் சுவனபதி செல்வதில் முந்திக்கொண்டீர்?'' என்றும் கேட்டார்கள்.

அதற்கு பிலால் (ரலி) நாயகமே! நான் எப்பொழுதும் இரண்டு ரக்அத் தொழாமல் பாங்கு கூறியதில்லை. அன்றி ஒளு முறிந்ததும் உளுச் செய்து கொள்ளாது நான் ஒருபோதும் இருந்ததில்லை. மேலும் நான் ஒளு செய்ததும் அல்லாஹ்வுக்காக இரண்டு ரக்அத்தொழுவது என்மீது கடமையென்று நம்பி வந்தேன். இரவு பகல் எந்நேரமாயினும் பூரணமாக உளுச் செய்து அந்த உளுவுடன் என்மீது விதிக்கப் பெற்றது என்று எண்ணி இரண்டு ரக்அத் தொழுவதைத் தவிர பெரும் நன்மை விளைவிக்கும் என்று நான் நம் வேறு எச்செயலையும் நான் இஸ்லாத்தில் செய்யவில்லை'' என்றனர். உணர்ச்சிவசப்பட்டவராக. எனினும் எதற்காக இவ்விதம்கேட்கின்றீர்கள் என்று கேட்கும் முன்னே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புதிரின் ரகசியத்தை வெளியிட்டார்கள்.

''பிலாலே! நான் சுவனபதியில் நுழைந்தபொழுது எனக் முன்னர் உம்முடைய காலணிகள் சப்தத்தைச் செவியுற்றேன். நீங்கள் சொன்ன இரண்டு காரணங்களுக்காக உங்களுக்கு இப்பதவி கிடைத்துள்ளது'' என்ற கருத்தைச் சொன்னார்கள்.

(ஆதாரம்; திர்மிதி, புகாரீ, முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் புரைதா (ரலி) அபூஹுரைரா (ரலி) அறிவித்த ஹதீஸ்களின் அடிப்படையைக் கொண்டது.)

இதனைக் கேட்டதும் மேலும் உணர்ச்சி வசப்பட்டு நெகிழ்ந்து போனார்கள் பிலால் (ரலி). ஒலு முறிந்தால் உடனே ஒலு செய்து கொள்ளுதலும், ஒளு செய்தவுடன் 2ரக்அத் நபில் தொழுதுகொள்ளும் காரணத்தினாலேயே இறைவன் இத்தகைய சிறப்பை அளித்துள்ளான் என்பதை அறிந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

### 12-ஆவது சந்திப்பு

# 16. சஹாபியின் முன் ஏன் திருமறையை ஓதினார்கள்?

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த ஸஹாபிகளில் உபையுப்னு கஃபு(ரலி) அவர்களும் ஒருவராவர். ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சஹாபியிடம் வந்து ''திருக்குர்ஆனின் 98-வது சூராவான அல்பய்யினா (தெளிவான சான்று)வை உங்கள் முன் ஓதுகிறேன்'' என்றார்கள். அதனைக் கேட்டதும் உபையுப்னு கஃபு (ரலி) அவர்களுக்கு வியப்பு ஏற்பட்டது. ''என்ன காரணத்திற்காக எனக்கு முன்னால்''அல்பய்யினா''வை ஓதுகிறீர்கள் என்று ஆச்சரியத்துடனும் திகைப்புடனும் கேட்டார்.

அதனைக் கேட்டதும் 'தோழரே! நிச்சயமாக அல்லாஹ் உமக்கு முன் 98-வது சூராவை ஓதுமாறு எனக்கு கட்டளையிட்டான்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர். அதனைக் கேட்டதும் சஹாபி மேலும் வியப்பும், திகைப்பும் அடைந்தவர்களாக 'தங்களிடம் அல்லாஹ் என் பெயரைக் குறிப்பிட்டுக் கூறினானா?'' என்று கேட்டார்கள். அதற்கு ''ஆம்'' என்று பதிலளித்தனர்; நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அதனைக் கேட்டதும் மகிழ்ச்சி மிகுதியால் அழுதுவிட்டனர் உபையுப்னு கஃபு (ரலி) அவர்கள்.

உலகெல்லாம் படைத்து ஆளக்கூடிய ரப்புல் ஆலமீனாகிய அல்லாஹுத் தஆலா தன்னுடைய பெயரை மொழிந்திருக்கிறாள் என்பதை நினைக்க நினைக்க உள்ளம் பூரித்துக் கொண்டேயிருப்பார்கள் அந்த சஹாபி.

(ஆதாரம்: புகாரீ, முஸ்லிம், திர்மிதி ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் அனஸ் (ரலி) அவர்களால் ரிவாயத்து செய்யப்பட்ட ஹதீஸின் கருத்தை ஆதாரமாகக் கொண்டது.)

### 13-ஆவது சந்திப்பு

## 17. நீண்ட நேரம் இரகசியம் பேசியது யார்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அலீ (ரலீ) அவர்களுடன் நெருங்கி காதில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அன்று ''தாயிஃப்'' யுத்த நாளாகும். நீண்டநேரமாக நெருக்கமாக அமர்ந்து காதோடு காதாக பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து சில ஜனங்கள் ''முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய இரசியப் பேச்சு அவர்களின் தந்தையுடன் பிறந்த சகோதரர் மகனிடம் நீண்டு விட்டது'' என்று கூறினர்.

இந்த !ஒரு மாதிரியான பேச்சு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காதுக்கும் எட்டியது. அப்பொழுதே அந்த ஜனங்களுக்குமுன் ''நான் அலீயிடம் இரகசியம் பேசவில்லை அல்லாஹ்தான் ''அவர்களுடன் ரகசியம் பேசினான்'' என்ற கருத்தை வெளியிட்டதும் குறை கண்டவர்கள் அப்படியே வாயடைத்துப் போனார்கள்.

ஆதாரம்: திர்மதியில் ஜாபிர் (ரலி) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் கொண்டது.

### 14-வது சந்திப்பு

## 18. நீண்ட நேரம் சஜ்தாவில் இருந்தது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருதடவை இரவு நேரத் தொழுகை தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது தொழுகையின் பொழுது கூடவே ஒரு சஹாபியும் தொழுது கொண்டிருந்தார். அப்படி தொழுது கொண்டிருக்கும்பொழுது



ஒரு ஸஜ்தாவில் நீண்ட நேரமாக ஸஜ்தாவிலிருந்ததைக் கண்ட ஸஹாபியினுடைய உள்ளத்தில் பலவகையான எண்ணங்கள் எழுந்தன. என்ன காரணத்திற்காக இவ்விதம் நீண்ட நேரம் சஜ்தாவிலிருக்கின்றனர் என்ற காரணம் புரியாமல் அவரும் அப்படியே சஜ்தாவிலிருந்து விட்டார்.

நீண்டநேரம் சஜ்தாவிலிருப்பதற்கு காரணம் ஒருவேளை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு ஏதேனும் புதுவிஷயம் ஏற்பட்டு விட்டதோ அல்லது ஏதேனும்''வஹி'' அருளப்பட்டதோ என்று எண்ணும் அளவிற்கு அப்படியே இருந்தனர், பிறகு சற்று நேரத்தில் ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தினார்கள். தொழுகை முடிந்தது. காரணத்தை சஹாபி அறியவிரும்பினார். எனவே தங்களது உள்ளத்தில் மேலே எழுந்த எண்ணங்களை வெளியிட்டார். அதனைக் கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்முறுவலுடன்'' இவையெல்லாம் இல்லை. என் மகன் என்மீது ஏறியிருந்தார். அவருடைய ஆசை தீருவதற்கு முன் நான் அவசரப்பட்டு எழுந்து விட விரும்பவில்லை'' என்று கூறினர். அருகே ஹஸன்(ரலி) யோ அல்லது ஹுஸைன் (ரலி)யோ இருந்தனர்.

(ஆதாரம்; அப்துல்லாஹ் இப்னு ஷத்தாத் அவர்கள் தம் தந்தை மூலமாக அறிந்ததை ரிவாயத் செய்து நஸயீ ஹதீது கிரந்தத்தில் பதிவாக்கப்பட்ட ஹதீதை ஆதாரமாகக் கொண்டது.)

### 15-ஆவது சந்திப்பு

## 19. வீட்டிற்கு வந்தவர் திரும்பிச் சென்றதேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உணவருந்த வரும்படி ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் அழைத்திருந்தனர். குறித்த நேரத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய வீட்டிற்கு வந்தனர். அப்பொழுது

தங்களுடைய இரண்டு கைகளையும் வாயிலின் இருபக்கங்களிலும் வைத்தனர். அப்பொழுது வீட்டில் ஒரு பக்கத்தில் திரை தொங்குவதைக்கண்டு அவர்கள் ''சட்'' டென்று திரும்பிச் சென்று விட்டனர். ஆனால் என்ன காரணத்திற்காக அவ்விதம் சென்றார்கள் என்பது தெரியாமல் மிகவும் கவலைப் பட்டார்கள் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள்.

உடனடியாக தாமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்திலே காரணத்தைக் கேட்டு ஆறுதல் பெற சென்றார்கள். ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் வருகையின் காரணத்தைப் புரிந்து கொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் திரும்பி வந்த புதிருக்குண்டான விடையளித்தார்கள்.

அவர்கள் சொன்னார்கள்; அலங்கரிக்கப்பட்ட எந்தவீட்டிலும் நுழைவது நபிக்கு அழகல்ல; உங்களுடைய இல்லத்தில் திரைச் சீலைகள் அலங்காரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. எனவேதான் திரும்பிவிட்டேன்.''

காரணத்தை விளங்கிக்கொண்ட ஹஜ்ரத் அலீ அவர்கள் வெட்கப்பட்டு தங்கள் வீடுநோக்கி நடந்தார்கள். எதற்காக? திரைச் சீலையை அகற்றுவதற்காக.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எது பிடிக்காதோ அவைகள் சஹாபாக்களுக்கும் பிடிக்காது; தவிர்த்துக்கொண்டார்கள்.

(இந்த சம்பவம் அபூதாவூதில் ஸஃபீனா (ரலி) அவர்கள் அறிவித்த ஹதீஸின் ஆதாரத்தைக் கொண்டது.)

''எந்த வீட்டில் நாயும் உயிர் பொருட்கள் பற்றிய ஓவியங்களும் இருக்கின்றனவோ அங்கு வானவர்கள் நுழைய மாட்டார்கள்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்: அபூதல்ஹா அன்ஸாரீ (ரலி)

ஆதாரம்; புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ.

# 20. திரைச் சீலைகளை ஏன் கிழித்தார்கள்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருநாள் பிரயாணத்திலிருந்து திரும்பி வீட்டிற்கு வந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையை எதிர்பார்த்து இருந்தார்கள். வீட்டிற்குள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நுழைந்ததும் என்றுமில்லாதளவு சினம் அடைந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களோ எதுவும் சொல்லவில்லை. வீட்டிற்கு வருகின்ற வரையில் சந்தோஷமாக முகமலர்ச்சியுடன் வந்தவர் இப்படி சினம் கொள்கிறாரே. அதற்கு என்ன காரணமோ என்று திகைப்படைந்த நிலையில் சற்று பயத்துடன் நின்றிருந்தார்கள். ''என்ன? ஏன் இவ்விதம் சினந்து கொள்கிறீர்கள்'' என்று கேட்கலாமா என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் எவ்விதம் கேட்பது என்ற தயக்கத்தோடு நின்றிருந்தவருக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடுத்த நடவடிக்கையில் புரியாத புதிரும் புரிந்து விட்டது.

கோபத்திற்குக் காரணம் வீட்டின் உள்வாயிலில் உயிர் பொருள் பற்றிய ஓவியங்கள் வரையப்பட்டிருந்த திரைச் சீலை ஒன்றை தொங்க விட்டிருந்ததுதான். அதனைக் கண்டதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சினத்துடன் அதனைப் பிடுங்கி கிழித்து விட்டார்கள். அப்பொழுது அவர்கள் 'ஆயிஷாவே' எவர் அல்லாஹ்வுடைய படைப்புகளோடு (ஓவியங்களை) ஒப்புவமை செய்கிறார்களோ அவர்களுக்கு மறுமையில் கடுமையான வேதனையுண்டு'' என்று கூறினர். எனவே ஆயிஷா (ரலி) அவர்கள் அதனைப் பல துண்டுகளாக்கி ஒரு தலையணையோ இரண்டு தலையணைகளோ செய்து கொண்டார்கள்.

(இந்த சம்பவத்தின் அடிப்படை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவித்ததாக புகாரீ, முஸ்லிம், முஅத்தா, நஸயீ ஆகிய கிரந்தங்களில் பதியப்பட்டுள்ள ஹதீஸின் ஆதாரமாகும்.)

''ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து, நான் நேற்றிரவு தங்களிடம் வந்(திருந்)தேன். ஆனால் உள்ளே வர எனக்குத் தடையிருந்தது, வீட்டில் இருந்த உயிர்ப் பொருள் பற்றிய ஓவியங்கள் வரையப்பட்டிருந்த திரையும். வீட்டிலிருந்த நாயும், கதவுகளில் ஆணின் உருவங்கள் வரையப்பட்டிருந்ததும்தான். எனவே தாங்கள், உருவங்களின் தலையைத் துண்டித்துவிடக் கட்டளையிடுங்கள். அது மரங் களைப் போன்று முண்டமாகிவிடும். அன்றி, திரையை (கிழித்து) மிதிப்படக் கூடிய இரு தலையணைகளாகச் செய்யுமாறு கட்டளையிடுவதுடன் நாயையும் அப்புறப்படுத்தச் சொல்லுங்கள்' என்று கூறினர். எனவே நான் அவ்விதமே செய்தேன்'' என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினர்.

[அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)

ஆதாரம்; முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ

### 16-ஆவது சந்திப்பு

## 21. மலை அதிர்ந்ததேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மலையின் குன்றின் மேல் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களோடு ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி), ஹஜ்ரத் உமர் (ரலி) யும், ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் இருந்தனர். அப்படி நடந்து வரும்பொழுது திடீரென்று மலை அதிர்வது போல துளும்பியது.

அதனைக் கண்டதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''மலையே! ஏன் அதிர்கிறாய். உன் மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், இரண்டு ஷஹீதுகளுமல்லவா இருக்கிறார்கள்'' என்றதும் மலையின் துளும்பல் நின்றுவிட்டது. யாரோ என்று அதிர்ந்தது. பிறகு இன்னார் என்று அமைதியானது, காரணம் புரியாமல் திகைப்படைந்து நின்றுவிட்டனர். நாயகத் தோழர்கள். அப்படி சொன்னதற்கு காரணம் பின்னால் புரிந்தது.



உமர் (ரலி), உஸ்மான் (ரலி) இருவருமே ஷஹீதாக்கப் படுவார்கள் என்கின்ற முன்னறிவிப்புதான் அது என்பதை அறிந்துகொண்டார்கள்.

### 17-ஆவது சந்திப்பு

## 22. பெருவிரலால் நடந்ததேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இல்லத்திற்கு ஒரு யூத சிறுவன் எப்பொழுதேனும் வந்து செல்வது வழக்கம். அந்த சிறுவன்மீது அலாதியான அன்பை வைத்திருந்தார்கள். அதேபோல அளவிற்கதிகமான அன்பை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அந்த சின்னஞ்சிறு சிறுவன் கொண்டிருந்தார். வழக்கமாக வரும் சிறுவன் சில நாட்களாக வராமல் இருப்பதைக் கண்டு விசாரித்தார்கள், அப்படி விசாரிக்கும் போது அந்த சிறுவன் உடல் நலம் (சுகமில்லாமல்) மரணப்படுக்கையில் கிடக்கிறான் என்ற செய்தி கிடைத்தது. உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பையனைப் பார்க்க அவனுடைய தந்தையான யூதனுடைய இல்லத்திற்கு விரைந்தார்கள். சிறுவனோ மரணத்தறுவாயில் இயலாதவனாகக் கிடந்தான். அவனுடைய இறுதி வேளையில் கலிமாவைச் சொல்லிக் கொடுக்க விரும்பினார்கள். எனினும் சிறுவன் தந்தையின் அனுமதியின்றி சொல்லத் தயங்கினான். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பார்வை பார்த்தார்கள் அந்த யூதனை. கருணை உள்ளம் கொண்ட காருண்ய நபியின் பார்வையால் மனம் இளகியது. மகனின் விருப்பம் போல் கலிமாவைச் சொல்ல அனுமதியளித்தான். கலிமாவைச் சொன்னான் சிறுவன். அவனின் உயிரும் போய் விட்டது.

அவனை ஜனாஸாவில் எடுத்துச் செல்லப்படும்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெருவிரலாலேயே நடந்து வந்தார்களாம். வழக்கத்திற்கு மாற்றமாக பெரு விரலால் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து வருவதைப் போலக் காணப் பட்டதால் சஹாபாக்கள் திகைப்பும், வியப்பும் அடைந்தனர்.

ஏன் அவ்விதம் நடந்து வருகிறீர்கள் என்று யாருக்கும் கேட்கத் துணிவில்லை. எனினும் சஹாபாக்களுடைய முகக் குறிப்பை உணர்ந்து கொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே புதிரின் முடிச்சை அவிழ்த்தார்கள்.

''இந்த ஜனாஸாவைத் தூக்கிச் செல்வதற்காக மலக்குகள் கூட்டங் கூட்டமாக இறங்கிக் கொண்டிருக்கிறார்கள், என்னுடைய கால்கள் எங்கே அவர்கள் மீது பட்டுவிடுமோ என்ற காரணத்திற்காகத்தான் அவ்விதம் நடந்து வந்தேன்'' எறு கூறினார்கள்.

இறுதி வேளையில் கலிமா சொன்ன சிறுவனுக்கு இந்த அளவிற்கு அந்தஸ்தை இறைவன் கொடுக்கின்றானென்றால் பிறக்கும் பொழுதே இஸ்லாமியனாகப் பிறந்து இறைவனுடைய இபாதத்திலேயே காலம் கழித்து இறந்துபோவோருக்கு எத்தகைய அந்தஸ்தைக் கொடுப்பான் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

### 18-ஆவது சந்திப்பு

## 23. இறந்தவன் கண்கள் திறந்திருப்பதேன்?

சில விஷயங்களை சஹாபாக்கள் கேட்காமலயே அதை விளக்கிக் காட்டுவார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். சில பொழுது சஹாபாக்களே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டு விளங்கிக் கொள்வார்கள்.

அப்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கேட்டு விளக்கத்தைச் சொன்ன கேள்விதான் இறந்தவனுடைய கண்கள் திறப்பதற்குக் காரணமென்ன? என்பது. கேள்விக்குரிய பதிலை யாரும் கூறவில்லை; எல்லோரும் மௌனமாகவே இருந்தனர். சிறிது நேரம் கழித்து அவர்களே புதிரின் விடையை அவிழ்த்து விட்டார்கள்.



''மனிதர்கள் இறந்தபின் அவர்கள் தங்களின் கண்களை திறந்தவாறே வைத்திருப்பதை நீங்கள் கண்டதுண்டா?'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளைப் பார்த்துக் கேட்டனர். அதற்கு ''ஆம்'' என்று பதில் சொன்னார்கள் சஹாபிகள். (அதற்கு) ''அப்பொழுதுதான் பிரிந்து செல்லும் தங்களுடைய ஆன்மாவை அவர்கள் நோக்குகின்றனர்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்:- அபூஹுரைரா (ரலி)
ஆதாரம்:- முஸ்லிம்

### 19-ஆவது சந்திப்பு

## 24. மய்யித்தை குளிப்பாட்டுவதை தடுத்ததேன்?

ஒரு மனிதன் மரணமடைந்து விட்டால் அவனைக் குளிப்பாட்டி கபன் உடுத்தி அடக்கம் செய்யப்பட வேண்டுமென்பது இஸ்லாமிய ஷரீஅத்தின் நியதி.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஒரு சஹாபியை, அதுவும் ஜுனுபாளியினுடைய நிலையில் மரணமடைந்த ஒரு சஹாபியைக் குளிப்பாட்ட வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். அதனுடைய பின்னணியிலுண்டான சம்பவம்தான் இது.

ஹன்ழலா (ரலி) ஒரு சஹாபி, வாலிபவயதுடைய சஹாபி, அன்று தான் நிக்காஹ் முடிந்து முதலிரவையும் முடித்து உறங்கிக் கொண்டிருந்த வேளை, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்கு அழைப்பு விடுக்கும் பறையோசை கேட்டு திடுக்கிட்டு விழித்தார். உடனே புறப்பட்டார் போருக்கு. புது மனைவியை விட்டு விட்டு, குளித்தால் நேரமாகி விடுமென்பதால் குளிக்காமலேயே புறப்பட்டு விட்டார் ஹன்ழலா. வெற்றி வாகை சூடிவந்து தன்னை மீண்டும் அரவணைத்

துக் கொள்வார் என்று நினைத்த மனைவிக்குக் கிடைத்த செய்தி இதுதான். ''ஹன்ழலா போரில் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்.''

சஹாபாக்கள் மட்டுமல்ல நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கண்கள் கலங்கினார்கள். ஜுனுபாளியின் நிலையிலேயே ஷஹீதாக்கப்பட்டிருப்பதினால் அவரைக் குளிப்பாட்டி அடக்கம் செய்து விட விரும்பி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முறையிட்டனர்,

அப்பொழுது வேண்டாமென்று தடுத்து விட்டவாறே எங்கோ தூரத்தில் இமை சிமிட்டாது வைத்த கண் மாறாத பார்வையில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அவர் பார்த்த இடத்தில் ஹன்ழலாவுடைய உடல்தான் கிடந்தது. இறந்து போனவருடைய உடலை இவ்வளவு நேரமாக பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற திகைப்பும், வியப்பும் கலந்த நிலையில் மற்ற சஹாபாக்கள் அன்னாரைச் சூழ்ந்திருந்தனர்.

குளிப்பாட்ட வேண்டாமென்று சொன்ன காரணத்திற்குண்டான புதிரின் முடிச்சை அவர்களாகவே அவிழ்த்தார்கள்;

அதோ! பாருங்கள் ஹன்ழலாவை வானத்திலிருந்து மலக்குகள் இறங்கி வந்து குளிப்பாட்டிக்கொண்டிருக்கிறார்கள்'' என்றார்கள். அதனால்தான் ''கஸீலத்துல்மலாயிக்கதி'' என்று சிறப்பு பெயரை ஹன்ழலா பெற்றுள்ளார்கள்.

''கஸீலத்துல் மலாயிக்கதி'' என்றால் வானவர்களால் குளிப்பாட்டப் பட்டவர்'' என்பது பொருளாகிறது.

தீனுக்காக இன்னுயிரை நீத்த ஹன்ழலா (ரலி) வுக்கு இறைவன் அளித்த கண்ணியம் அது.

இச்சம்பவத்தின் மூலக் கருத்து ஷமாயிலெ திர்மிதீ ஹதீஸ் கிரந்தத்தின் விளக்கவுரையிலிருந்து எடுத்தது.

## 20-ஆவது சந்திப்பு

# 25. அனுமதியில் மாற்றம் ஏன்?

ஒருமுறை ஒரு சஹாபி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து 'யாரசூலல்லாஹ்! இறைவழியில் நான் ஷஹீதாக்கப்பட்டால், என்பாவங்கள்(யாவும்) மன்னிக்கப் பட்டு விடுமா என்று கேட்டார்.

அதற்கு ''ஆமாம் நீர்பொறுமையுடனும், கலப்பற்ற எண்ணத்துடனும் விரோதியை முன்னோக்கிச் சென்று, புற முதுகு காட்டாத நிலையில் இருந்திருப்பாயேயானால்'' என்று கூறினர். அதனைக் கேட்டபின் சஹாபி திருப்தியுடன் சென்றார். ஆனால் அவர் சற்று தூரம்தான் சென்றிருப்பார். உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சஹாபியை மீண்டும் அழைத்து வரச்சொன்னார்கள். மீண்டும்நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அழைத்ததைக் கண்டு சஹாபி வியப்புற்றார். ''இப்பொழுதுதானே கேட்டு வந்தோம்; அதற்குள் மீண்டும் என்ன காரணத்திற்காக அழைக்கிறார்' என்ற கேள்விக்குறியோடு நபிகள் நாயகம் (ஸல்) அருகில் சென்று நின்றார். அவரைப் பார்த்து ''நீங்கள் என்ன கேட்டீர்கள்'' என்று கேட்டனர். ஆச்சரியத்துடன் சஹாபி தான் முன்பு கேட்ட கேள்வியையே சொன்னார். அதனைக் கேட்டதும் ''ஆமாம் நீர் பொறுமையுடனும், கலப்பற்ற எண்ணத்துடனும் விரோதியை முன்னோக்கிச்சென்று, புறமுதுகு காட்டாத நிலையில் ஷஹீதாகி விட்டால் உன் பாவங்கள் (யாவும்) மன்னிக்கப் படும். ஆனால் ''கடனைத் தவிர'' என்று சொன்னார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். முதலில் கூறும் போது ''கடனைத் தவிர'' என்ற வார்த்தையைக் கூறவில்லையே. இப்பொழுது கூறுகிறாரே என்று ஆச்சரியப் பட்டார் சஹாபி. அதற்கு என்ன காரணம் என்று கேட்க எண்ணினார். ஆனால் கேட்க துணிவு வரவில்லை. எனினும் நபிகள் நாயகம் (ஸல்) அந்த சஹாபியின் தயக்கத்தைப் புரிந்து கொண்டவர்களாக புரியாத அந்த புதிரின் ரகசியத்தைச் சொன்னார்கள்:

''முதலில் நீங்கள் கேட்கும் பொழுது கடனைத் தவிர என்ற வார்த்தையைக் கூறவில்லை. நீங்கள் திரும்பிச் செல்லும் பொழுது ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து ''கடனைத் தவிர'' என்று சேர்த்து சொல்லுக'' என்று கூறினார்கள். எனவே தான் அவ்விதம் சொன்னேன்,'' என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைத்த படியே.

(இந்த சம்பவம் முஸ்லிமில் பதிவாக்கப்பட்ட, அம்ருப்னுல் ஆஸ் (ரலி) ரிவாயத் செய்த ஹதீஸின் அடிப்படை.) எனவே கடன் விஷயத்தில் எச்சரிக்கையோடு இருங்கள்.

கடனுக்கு மன்னிப்பு கிடையாது. இறைவன் நாடினால் எல்லாக் குற்றங்களையும் ஒரு விசுவாசிக்கு மன்னித்து விடுவான். ஆனால் கடனை மன்னிக்க மாட்டான். ஏனென்றால் கடன் என்பது ''குறிப்பிட்ட காலத்தில் திருப்பித் தரவேண்டிய பொருளாகும்.''

''தர்மம்'' என்றால் அதைத் திருப்பி பெறமுடியாத பொருள்.

கடன் வாங்கியவர் மீது அல்லாஹ்வுடைய ரஹ்மத் அதிகமாக இறங்கிக் கொண்டேயிருக்கும்.

கடன் கொடுப்பது தர்மம் செய்வதைக் காட்டிலும் பதினெட்டு மடங்கு நன்மைகள் அதிகம்.

நான்கு காரியங்கள் துரிதமாக நிறைவேற்ற வேண்டிய கடமையாகும் என்று ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள் அவைகளாவன:-

1. வயதுக்கு வந்த பெண்ணை உரிய காலத்தில் மணமுடித்து வைக்க வேண்டும்.
2. வந்திருக்கும் விருந்தினர்களை உடனே உபசரிக்க வேண்டும்.
3. மய்யித்தை அதிக நேரம் வைக்காமல் உடனடியாக எடுத்து அடக்கம் செய்யப்பட வேண்டும்.



4. வாங்கிய கடனை உடனே திருப்பிச்செலுத்திடல் வேண்டும்.

''அல்லாஹ் விலக்கிய பெரும் பாவங்களுக்கு அடுத்தபடியாக, அடியான் அல்லாஹ்வைச் சந்திக்கும் பொழுது அல்லாஹ்விடத்தில் பாவங்களில் நிச்சயமாகப் பெரும்பாவம் எதுவெனில் அவன் கடனை தீர்க்கப் போதுமான சொத்துக்களை விட்டுச் செல்லாமலிருப்பதாகும்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்:- அபூ மூஸா (ரலி)
ஆதாரம்:- அபூதாவூத்.

'எவர் மக்களுடைய பொருள்களைத் திரும்பக் கொடுத்து விடும் நோக்கத்துடன் பெறுகிறாரோ அவரை விட்டும் அல்லாஹ் (அக்கடனை) தீர்த்து வைக்கிறான். அன்றி, எவன் மக்களுடைய பொருளை பாழாக்கும் (மோசம் செய்யும்) நோக்கத்துடன் (கடனாகப்) பெறுவானோ அவனை அல்லாஹ் பாழாக்கி விடுவான்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்:- அபூஹுரைரா (ரலி)
ஆதாரம்:- புகாரி.

எனவே மரணத்திற்கு முன் கடனைத் திருப்பி செலுத்திட வகை செய்யுங்கள். அல்லாஹு தஆலா உங்கள் மீது ரஹ்மத்' என்னும் அருளை பொழியச் செய்வான்.

## 21-ஆவது சந்திப்பு

# 26. ஹஸனை மட்டும் ஆதரித்ததேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அன்பு மகளார் ஹஜ்ரத் பாத்திமா (ரலி) அவர்களின் அன்புச் செல்வங்கள் தான் ஹஸன் (ரலி) அவர்களும், ஹுஸைன் (ரலி) அவர்

களுமாவார்கள். ஹஸன் (ரலி) அவர்களுடைய முகச்சாயல் நபி கள் நாயகம் (ஸல்) அவர்களையே ஒத்திருக்கும். மேலும் நபி கள் நாயகம் அவர்களுடைய மார்பு வரையுள்ளசாயல் ஹஸன் (ரலி) அவர்களிடத்திலும், மார்புக்குக்கீழே ஹுஸைன் (ரலி) அவர்களிடத்திலும் இருந்ததாக வரலாற்று கிரந்தங்களில் குறிப்புகள் காணப்படுகிறது.

'ஹஸன், ஹுஸைன் (ரலி) ஆகியோர் சுவனத்து இளை ஞர்களின் தலைவராவர்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள் கூறினர்.

அறிவிப்பவர்;- அபூஸஈதில் குத்ரி
ஆதாரம்;- புகாரீ, முஸ்லிம்

அத்தகைய சிறப்புப் பெற்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர் களுடைய பேரர்களாகிய ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) அவர் கள் இருவரும் தமாஷாக குஸ்தி போட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பார்த்துக் கொண்டிருத்தனர். மற்றும் பாத்திமா (ரலி) அவர்களும் இருந்தார்கள். பேரப்பிள்ளைகள் ஒருவருக் கொருவர் கட்டிப் பிடித்துக் கொள்வதைக் கண்டு சந்தோஷ மிகுதியால் ''ஹஸனே! விடாதே நல்லா பிடியுங்கள்'' என்று ஹஸன் (ரலி) அவர்களை ஆதரித்துத் துரிதப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஹுஸைன் (ரலி) வை ஒன்றும் சொல்ல வில்லை. சிறிது நேரம் பொறுத்துப்பார்த்தார்கள் பாத்திமா (ரலி). ஹுசைன் (ரலி)யை ஆதரிப்பதாகக் காணோம். மீண்டும் மீண்டும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸன் (ரலி) அவர்களையே ஆதரித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இதனைக் கண்ட பாத்திமா (ரலி) அவர்களுடைய உள்ளம் சற்று கவலை கொண்டது. ''பேரப் பிள்ளைகள் இருவர் இருக்க ஹஸனை மட்டும் ஆதரிக்கிறீர்களே, ஹுஸைனை விட்டு விட்டீர்களே'' எனக் கேட்கக் கூடாது 'என்றுதானிருந் தார்கள். எனினும் பெற்ற பிள்ளை பாசத்தினால் தந்தையிடம் வாய் திறந்து ''இது நியாயமா?''என்று கேட்டு விட்டார்கள்.



அதனைக் கேட்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனம் கவலைப்படவில்லை. மாறாக புன்னகை பூத்தபடியே 'அதோ! ஜிப்ரீல் ஹுசைனை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் நான் ஹஸனை ஆதரித்தேன்'' என்றார்கள். பாத்திமா (ரலி) அவர்கள் இதனைக் கேட்டதும் மேனி புல்ல ரிக்து கண்களில் கண்ணீரும் வரையிட்டது. புரியாத புதி ருக்கு விடை பகர்ந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்பு மகனை அரவணைத்துக் கொண்டார்கள்.

### ௨௭-ஆவது சந்திப்பு!

## 27. ருகூவில் நீண்ட நேரம் தாமதித்ததேன்?

அதிகாலை நேரம். இருள் விலகுகின்ற வேளை. முழு மையான வெளிச்சம் இன்னும் பூமியின் மீது படரவில்லை. மங்கிய ஒளியினில் சுப்ஹுவுடைய தொழுகைக்காக வேக வேகமாக பள்ளியை நோக்கி விரைந்து சென்று கொண்டி ருக்கிறார்கள், அலீ (ரலி) அவர்கள். ''தக்பீர் தஹ்ரீமா'' தவறவிட்டு விடக்கூடாது என்பதற்காக நடையில் வேகத் தைக் கூட்டியிருந்தார். எப்படியும் தக்பீர் கூறுவதற்குள் சென்று தொழுகையில் சேர்ந்து விடவேண்டுமென்ற துடிப் புடன் ஒரே சிந்தனையில் சென்று கொண்டிருந்தவருக்கு தடையாக, நடந்துசெல்லும் குறுகலான பாதையில் முன்னே ஒரு வயதான மனிதர் நடந்து சென்று கொண்டிருந்தார். பார்த்தால் சல்மான் பார்ஸி (ரலி) யைப்போல இருந்தார். எனவே வேகத்தை மட்டுப்படுத்தி அவருக்குப்பின்னே தொடர்ந் தார். காரணம் வயதானவர்களை முந்திச் செல்லாது மரி யாதை கொடுக்கவேண்டுமென்பதற்காகவே. அந்த பெரிய வர் மெதுவாக நடந்து செல்கிறார். அவர் அந்த குறுகலான ஒற்றையடிப் பாதையைக் கடந்து செல்வதற்கு முன் ''இகாமத்'' சொல்லி விடுவார்களே என்ற அச்சம் வேறு அலீ

(ரலி) உள்ளத்தில் எழுந்தது. உடனே இறைவனிடம் துஆ செய்கிறார்.

''இறைவா! சுப்ஹூ தொழுகையுடைய இரண்டு ரக்அத்துகளும் பூரணமாகக் கிடைக்கும்படி அருள் பாலிப்பாயாக!! என்று நடந்துகொண்டே ''துஆ'' செய்தார்கள்.

ஒற்றையடிப் பாதையைத் தாண்டி அந்தப் பெரியவர் பள்ளியை நோக்கித் திரும்பாமல் வேறு திசையில் திரும்பிவிட்டார். வேகமாக நடந்து வந்து பார்த்தார் அந்த பெரியவரை. அவர் ஸல்மான் பார்ஸி (ரலி) அல்ல. வேறொரு யூத கிழவர். மனம் அந்த நேரத்தில் சலித்துக் கொண்டாலும் 'ஒரு பெரியவருக்குத்தானே மரியாதை கொடுத்தோம்'' என்று ஆறுதல் பெற்று சமாதானம் செய்து கொண்டு வேகமாக பள்ளிக்குள் விரைந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தூரத்திலிருந்து பார்த்ததும் மனம் ''திக்''கென்றது. காரணம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''ருகூ'' விலிருந்தனர். ''ருகூ'' லிருக்கும் நேரமோ மிகக் குறைவு. 3 அல்லது 5 அல்லது ஏழு தஸ்பீஹ் நேரத்திற்குள் ருகூஃ முடிந்துவிடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அடுத்த வினாடிக்குள் ஒரு ரக்அத்முடிந்துவிடும். அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ருகூவிலிருந்து எழுந்துவிட்டால் ஒரு ரக்அத் முடிந்து விடும். அலீ (ரலி) பதைபதைத்து ஓடி வருகிறார். என்னதான் வேகமாக வந்து ருகூவில் சேர்ந்து கொண்டாலும் குறைந்தது மூன்று தஸ்பீஹ்நேரமாவது தாமதிப்பது ஷரத்து. என்ன செய்வது? தக்பீர் கட்டி, நிய்யத்துச் சொல்லக்கூட நேரமிருக்காதே, அதற்குள் ஒரு ரக்அத் முடிந்து விடுமே. நமக்குக் கிடைத்தது அவ்வளவுதான் என்ற எண்ணத்தோடு துரிதமாக ஜமாஅத்துடன் சேர்ந்துகொண்டார்.

தக்பீர் சொல்லி கையைக் கட்டியபின், ஸனாவும் ஓதி, ருகூவுக்கும்சென்று தஸ்பீஹ்களும் ஓதியபின்னும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''ருகூ''விலிருந்து எழவில்லை. வழக்கத்திற்குமாறாக இன்றுசிறிது அதிகநேரம் ருகூவில் தாமதித்துக்



கொண்டிருந்தனர். அலீ (ரலி)ருகூவில் தஸ்பீஹ் முடித்துசாவகாசமாக நிதானப்பட்டு இருக்கின்ற வேளையில் ''ஸமிஅல்லாஹூ லிமன்ஹமிதா'' என்று கூறிக் கொண்டே நிலைக்கு வந்தனர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். வழக்கத்திற்கு மாறாக ''ஸமிஅல்லாஹூலிமன் ஹமிதா'' என்று சொன்னதைக் கேட்டதும் முஆவியா (ரலி) அவர்கள்; ''றப்பனா லகல் ஹம்து'' என்று தஸ்பீஹ் சொல்லிக்கொண்டே எழுந்தார்கள். தொழுகை முடிந்தது. எல்லோருடைய உள்ளத்திலும் இன்று தொழுகையில் வழக்கத்திற்கு மாற்றமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட புதிரின் காரணத்தை அறியும் ஆவல் மேலிட்டிருந்தது. தொழுகை முடிந்ததும் ''அலீ எங்கே''? என்று தான் முதலில் கேட்டார்கள். அலீ (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் ஆஜரானார்கள்.

வழியில் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். வழியில் வரும்பொழுது பெரியவர் குறுக்கிட்ட சம்பவத்தை கூறியதுடன், தொழுகையின் ரக்அத்துகள் பூர்த்தியாகக் கிடைக்க வேண்டுமென்று இறைவனிடம் இறைஞ்சியதையும் கூறினார்கள், அதனைக் கேட்டதும் ''அலீயே! உங்களுடைய இறைஞ்சுதலை அல்லாஹூ தஆலா ஏற்றுக் கொண்டான். இரண்டு ரக்அத்துகளும் உங்களுக்குக்கிடைக்க வேண்டுமென்பதற்காக அல்லாஹூ தஆலா ஜிப்ரீல் (அலை) அவர்களை அனுப்பி வைத்து விட்டான். நான் ருகூவுக்குச் சென்று நிமிர நாடிய பொழுது அவர்களுடைய இறக்கையால் என்னுடைய முதுகை அழுத்திக் கொண்டார், எதுவரையிலென்றால் நீங்கள் ருகூவில் வந்து சேருகின்ற வரையில்'' என்று சொன்னதும் அலீ (ரலி) உணர்ச்சி வசப்பட்டுப் போனார். மேலும் ''உங்களுடைய துஆவை அல்லாஹ் கேட்டுள்ளான் என்பதை உணர்ந்து கொண்டேன். எனவேதான் சமிஅல்லாஹூ லிமன் ஹமிதஹ் (அல்லாஹ், அவனைப் புகழுபவனின் புகழைக் கேட்கக் கூடியவனாக இருக்கின்றான்) என்றுகூறி எழுந்தேன்'' என்றார்கள்.

இன்னும் முஆவியா (ரலி) அவர்களை அழைத்து விசாரித்த பொழுது ''நாயகமே! தாங்கள் சமிஅல்லாஹுலிமன் ஹமிதா என்று கூறியதைக் கேட்டதும் என்னையறியாமல் ''றப்பனா லகல் ஹம்து'' என்று அல்லாஹ்வைப் புகழ்ந்து விட்டேன்'' என்று கூறினார்கள்.

இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிடித்து விட்டது. இது இறைவனின் நாட்டத்தினால் நடந்திருப்பதால் இனி மேற்கொண்டு தொழுகைகளில் ''சமிஅல்லாஹுலிமன் ஹமிதாவும், றப்பனா லகல் ஹம்தும் தொடர்ந்து தொழுகையில் புகழப்படும் என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர். அதன்படியே இன்றளவும் தொழுகையில் நடைபெற்று வருகிறது என்பதை பெரியோர் வாயிலாக செவி வழியாக இச்சம்பவத்தை அறிந்துள்ளதை இங்கே கொடுத்துள்ளோம்.

### ௨௮-ஆவது சந்திப்பு

## 28. திராட்சைப்பழம் யாருக்கும் கொடுக்காமல் சாப்பிட்டதேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மஜ்லிசில் சஹாபாக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் ஒரு பெண்மணி அழகான ஒரு திராட்சப்பழக்குலையைக் கொண்டு வந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்துச் சென்றாள். அன்புடன் அளிக்கப்பட்ட அந்தபழத்தை அப்பொழுதே அங்கேயே சஹாபாக்களுக்கு_மத்தியிலேயே நபியவர்கள் சாப்பிட ஆரம்பித்தனர்.

அந்த திராட்சைக் குலையில் முதலில் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில்போட்டனர். பிறகு அடுத்த இரண்டு. மூன்று பழங்களையும் வாயில் போட்டனர், பின்பு ஒவ்வொன்றாகப் பிய்த்து வாயில் போட்டு சுவைத்துக்கொண்டே இருந்தனர்.



ஆனால் பழத்தை யாருக்கும் பங்கிட்டுக் கொடுக்க வில்லை. பழம் முழுவதையும் சாப்பிட்டு முடிந்து விட்டு உட்காரவும் அதே பெண்மணி மீண்டும் ஒரு திராட்சைப் பழக் குலையை கொண்டு வந்து கொடுத்துச் சென்றாள். அதையும் வாங்கி ஒவ்வொன்றாக பிய்த்து வாயில்போட்டு சுவைத்துக்கொண்டே முடித்து விட்டனர், சஹாபாக்களுக்கு மிகவும் ஆச்சரியமாகி விட்டது. எந்தவொரு சிறிய அன்பளிப்புக் கிடைத்தாலும்சஹாபாக்களுக்கு பங்குக் கொடுக்காமல் உண்ணாத நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்கள் இன்று மட்டும் வழக்கத்திற்கு மாறாக இரண்டு திராட்சைப் பழக்குலையையும் ஒருவராகவே தின்று தீர்த்து விட்டனரே என்ற எண்ணம் சில சஹாபிகளுடைய உள்ளத்தில் எழுந்ததே தவிர அப்படி எண்ணம் தங்களுடைய உள்ளத்தில் எழுந்ததைக் காட்டிக் கொள்ளவில்லை. இன்னும் ஆச்சரியப்படும் வகையில் மூன்றாவது முறையாகவும் அந்த பெண்மணி இன்னுமொரு திராட்சைப் பழக்குலையைக் கொண்டு வந்துகொடுத்து விட்டுச்சென்றாள். முதல் இரண்டு குலைகளைத் தின்றது போல இந்த மூன்றாவது பழக்குலையையும் முழுவதுமாக உண்டு விட்டனர். 'ஏன் அவ்விதம் செய்தீர்கள்?' என்று சஹாபாக்கள் கேட்கும் முன் புதிருக்குண்டான விடையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அவிழ்த்தார்கள்.

''தோழர்களே! எனக்குக் கிடைத்த மூன்று திராட்சைக் குலைகளையும் நான் ஒருவனே தின்று விட்டது உங்களுக்கு மனதில் ஒருவித எண்ணமுண்டாயிருக்கக்கூடும். அந்தப்பெண்மணி கொண்டுவந்து கொடுத்ததும் அவைகளில் சிலதைப் பிய்த்து தின்று பார்த்தேன். அது புளிக்கிறதா? இல்லை இனிக்கிறதா என்று பார்ப்பதற்காக. இனிப்பாக இருந்தால் உங்களுக்குப் பங்கிட்டு விடலாமென்றிருந்தேன். ஆனால் பழங்கள் புளிப்பாக இருந்தன. எனவே புளிப்பான பழங்களைக் கொடுத்து என்னுடைய தோழர்களுக்கு கஷ்டத்தை உண்டாக்க விரும்பவில்லை. அதே போல இரண்டாவது மூன்றாவது குலைகளும் புளிப்புடையதாகவே இருந்தது.

எனவேதான் அவைகளை நானே சாப்பிட்டு விட்டேன்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியபொழுது, அன்னார் சஹாபாக்கள் மீது எந்த அளவிற்கு நன்மதிப்பை வைத்திருந் தார்களென்பது புலப்படுகிறது.

(கருத்து விளக்கம்)

## 24-வது சந்திப்பு

# 29. மூன்று முறை ஆமீன் கூறியது ஏன்?

அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ பள்ளியில் ஸஹாபாக் களின் கூட்டம் நிறைந்திருந்தது.

''குத்பா'' ஓதும் நேரம் வந்தது.

உரையாற்றுவதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிம்பர் படிகளின்மீது ''பிஸ்மில்லாஹ்'' என்று வலது காலை வைத்து ஏறினர். ஏறியவர் அப்படியே ஸ்தம்பித்தவராக ஒரு சில வினாடிகள் நின்றுவிட்டனர். பிறகு ஆமீன் என்றனர். அடுத்து இரண்டாவது படிக்கட்டில் ஏறி நின்றதும் மீண்டும் ''ஆமீன்'' என்றனர். அதேபோல் மூன்றாவது படி ஏறியதும் ''ஆமீன்'' என்றனர், பிறகு வழக்கம்போல் மிம்பர் படிகளில் நின்று பயான் நிகழ்த்தியபின் ''குத்பா'' ஓதி முடித்தனர்.

சஹாபாக்களுடைய உள்ளங்களில் ஒரே ஆச்சரியம். காரணம் வழக்கத்திற்கு மாற்றமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து கொண்டதுதான். அதாவது வழக்கமாக எப்பொழுதும் ''பிஸ்மில்லாஹ்'' கூறி மிம்பர் படிகளில் ஏறி உரையாற்றுவார்: ஆனால் இன்று வழக்கத் திற்கு மாற்றமாக ஒவ்வொரு படி ஏறும்போது ஆமீன் ஆமீன் ஆமீன் என்று படிக்கு ஒரு ஆமீன் கூறியிருக்கிறார். இதனுடைய காரணமென்ன என்று கேட்க ஆவலோடு சஹா



பாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விளக்கத்திற்காக காத்திருந்தார்கள். சஹாபாக்களின் விருப்பத்திற்கேற்ப புதி ரின் விடைகளையும் விளக்கி வைத்தார்கள்.

முதன் முறையாக நான் படி ஏறியதும் ஜிப்ரீல் (அலை) என்னிடம் வந்து, ''எவர்கள் என் நாமத்தைக் கேட்டதும் சலவாத்துக் கூறவில்லையோ அவர்கள் நாசமடையட்டும்'' என்று கூறினார்கள். அதற்கு (நான்) ''ஆமீன்'' என்று கூறினேன்.

அடுத்த (இரண்டாவது) படி ஏறும்பொழுது ''ரமலான் மாதம் வந்தும்கூட எவர்கள் பாவமன்னிப்பைப் பெறவில் லையோ அவர்கள் நாசமடையட்டும்'' என்று கூறினார்கள். அதற்கு நான் ''ஆமீன்'' என்று கூறினேன்.

மூன்றாவது படி ஏறும்பொழுது ''எவர்களுக்குப் பெற் றோர்கள் இருந்தும் (அவர்களுக்குப் பணிவிடை செய்யாத தின் காரணத்தினால்) சுவர்க்கம் செல்லவில்லையோ அவர் களும் நாசமடையட்டும்'' என்றார்கள். அதற்கும் நான் ''ஆமீன்'' என்று கூறினேன் என்று கருத்தை வெளியிட்டார் கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

(இந்த சம்பவம் திர்மதியில் பதிவாகியுள்ள ஹதீஸின் அடிப்படையைக் கொண்டது,)

## 25-ஆவது சந்திப்பு

# 30. தொழும்பொழுது கிப்லாவை மாற்றியதேன்?

ஹிஜ்ரி இரண்டாவது ஆண்டில் ஒரு நாள். அசருடைய தொழுகை வேளை. நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் இமாமாக முன் நின்று தொழுகையை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

அன்னாருக்குப்பின்னால் சஹாபாக்களும் நின்றுதொழுது கொண்டிருக்கிறார்கள். அசர் தொழுகையினுடைய இரண்டு ரக்அத் முடிந்துள்ள நேரம். திடீரென்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கிப்லாவின் திசையைவிட்டுத் திரும்பி வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டார்கள். தொழுகையில் இந்த மாற்றம் கண்ட சஹாபாப் பெருமக்களும் காரணம் புரியாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பிய திசையிலேயே திரும்பி நின்றனர். ஆனால் யாரும் தொழுகையை முறிக்க வில்லை. தொழுகை ஆரம்பிக்கப்படும் பொழுது பைத்துல் முகத்தஸ்' இருக்கும் வடக்கு திசையையே கிப்லாவாகக் கொண்டு தொழ ஆரம்பித்தனர். ஆனால் தொழுகையின் இடையில் திடீரென்று கஃபத்துல்லாஹ் இருக்கும் தெற்கு திசையைக் கிப்லாவாக ஆக்கிக்கொண்டார்கள். இதற்குக் காரணம் யாது என்று ஒவ்வொரு சஹாபியும் தெரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தனர். தொழுகை முடிந்தது. புதிருக்குண்டான விடையையும் அவிழ்த்துக் கொடுத்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

''அருமை தோழர்களே! நாம் இதுவரை ''பைத்துல் முகத்தஸ்'' பள்ளியையே கிப்லாவாக அமைத்து தொழுது வந்தோம். ஆனால் இது யூதர்களுடைய கிப்லாவாகவும் இருக்கிறது. எனவே நமக்கென்று ஒரு கிப்லா அமைந்தால் நலமாக இருக்குமென்று அல்லாஹ்விடம் இறைஞ்சினோம். அதற்காகத்தான் நமக்கு கஃபத்துல்லாஹ்வை கிப்லாவாக ஆக்கி விட்டான். அல்ஹம்துலில்லாஹ்.

நாம் தொழுது கொண்டிருக்கும் சமயம் ஜிப்ரீல் (அலை) வந்து கிப்லா மாற்றப்பட்ட விஷயத்தை எத்திவைத்தார்கள். எனவேதான் நாம் புதிய கிப்லாவின் திசைக்குத் திரும்பினோம் என்ற கருத்தை வெளியிட்டார்கள். அதனைக் கேட்டதும் சஹாபாக்கள் மகிழ்ச்சியில் இறைவனைப் புகழ்ந்தார்கள் அல்லாஹு அக்பர்.

(நபியே) உம்முடைய முகம், (பிரார்த்தனைசெய்து அடிக்கடி) வானத்தை நோக்குவதை நாம் காண்கிறோம். ஆதலால்



நீர் விரும்பும் 'கிப்லா'(வாகிய மக்கா) வின் பக்கமே நாம் நிச்சயமாகத் திருப்புகிறோம். எனவே, நீர் (தொழும்பொழுது மக்காவிலுள்ள) 'மஸ்ஜிதுல் ஹரா'மின் பக்கமே உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! (விசுவாசிகளே) நீங்களும் எங்கிருந்த போதிலும், (தொழுகையில்) அதன் பக்கமே உங்களுடைய முகங்களைத் திருப்புவீர்களாக! வேதம் கொடுக்கப் பெற்ற (யூதர்களும் கிறிஸ்து)வர்களும் (நீர் மக்காவின் திசையளவில் திரும்பிய) ''இது தங்கள் இறைவனிடமிருந்(துவந்)த உண்மை(யான உத்திரவு) தான்'' என நிச்சயமாக அறிவார்கள். (ஏனென்றால், அவ்வாறே அவர்களுடைய வேதத்தில் இருக்கிறது. எனவே, உண்மையை மறைக்கும்) அவர்கள் செய்வதைப்பற்றி, அல்லாஹ் பராமுகமாயில்லை.

அல்குர்ஆன் 2;144

ஆரம்ப காலத்தில் யூதர்கள் தொழும் திசையை நோக்கியே தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தொழுது வந்தார்கள். எனவே யூதர்களுடைய உள்ளத்தில் ஒருவித நப்பாசை எண்ணங்கள் உண்டாயிற்று. ''நம்முடைய கிப்லாவை நோக்கி தொழுபவர்கள் நம்முடைய யூத மதத்தில் முற்றிலும் இணைந்து விடுவார்கள்'' என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். மேலும் முஸ்லிம்களுக்கென்று ஒரு ''கிப்லா'' கூட இல்லையே என்றும் நகைத்தனர். மேலும் ''நாம் தொழும் திசையில்தானே முஸ்லிம்களும் தொழுகிறார்கள்'' என்றும்பிதற்றிக் கொண்டிருந்தனர். எனவே அவர்களுக்கு மாற்றம் காணவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தார்கள். முடிவில் அன்னாரின் வேண்டுகோளை இறைவன் ஏற்று ''கஃபத்துல்லாஹ்''வை கிப்லாவாக ஆக்கிக் கொடுத்தான், அன்று முதல் ''கஃபா'' முஸ்லிம்களின் கிப்லாவாக ஆகியது.

யூதர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள்.

—★—

## 26-ஆவது சந்திப்பு

# 31. தொழுகையில் காலணிகளை கழற்றியதேன்?

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு நாள் காலணிகளோடு தொழுது கொண்டிருந்தார்கள். திடீரென்று காலிலிருந்த காலணிகளை உதறி கழற்றி விட்டுவிட்டார்கள். தொழுது கொண்டிருக்கும் பொழுது இவ்விதம் காலணிகளை ஏன் கழற்றவேண்டும் என்ற எண்ணம் அருகேயிருந்த சஹாபிகளுடைய உள்ளத்தில் எழுந்தது. அதற்குரிய காரணத்தைக் கேட்கும் முன் புதிர் உண்மையை அவர்களே பகர்ந்து தெளிவை உண்டாக்கினார்கள்.

''நான் தொழுது கொண்டிருக்கும் பொழுது என்னுடைய காலணியில் சிறிது நஜீஸ் ஒட்டியிருப்பதாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினர். எனவேதான் உடனே காலணிகளைக் கழற்றிவிட்டேன்'' என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

சஹாபாக்களுடைய உள்ளத்தில் ஈமான் பொங்கியது.

## 27-ஆவது சந்திப்பு

# 32. நீண்ட நேரம் துஆ கேட்டதேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தடவை பனூ முஆவியாவுடைய பள்ளிக்குச்சென்று தொழுதார்கள். தொழுது விட்டு இறைவனிடம் 'துஆ' கேட்டார்கள். நீண்டநேரமாக 'துஆ' கேட்டார்கள்.

சஹாபாக்கள் சிலரும் கூட இருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'துஆ' கேட்டு விட்டு வரட்டும் என்று அவர்களை எதிர் பார்த்துக் காத்திருந்தனர். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ ''துஆ''வை முடிக்க வில்லை. நீண்ட நேரமாகியும் ''துஆவை கேட்டுக் கொண்டே இருந்தனர்; உளமுருகி இறைவனிடம் நீண்ட நேரம் ''துஆ'' செய்து கொண்டிருந்ததைப் பார்த்த சஹாபிகளுக்கு ஆச்சரியமாகி விட்டது. ஏன்? என்ன காரணம்? என்று புரியாமல் அனைவரும் அங்கு காத்துக்கிடந்தனர். பொறுமையோடு ஒருவருக் கொருவர் பார்த்தபடி அமர்ந்திருந்தனர். பொறுமைக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தாற் போல நீண்ட நேரத்திற்குப்பின் 'துஆ'வை முடித்துவிட்டுத் திரும்பினார்கள். திரும்பி வந்த சூட்டுடனே ஸஹாபாக்களுக்கு புதிரின் விஷயத்தையும் சொன்னார்கள்.

''நான் என் இறைவனிடம் மூன்று விஷயங்களைப்பற்றி கேட்டேன். இரண்டை எனக்கு அளித்துவிட்டு, ஒன்றைமட்டும் எனக்கு அளிக்கவில்லை. என் சமூகத்தினர் அனைவரையும் ஒரேயடியாகப் பஞ்சத்தில் அழித்துவிட வேண்டாம் என்று இறைவனிடம் இறைஞ்சினேன். அதை அவன் ஏற்றுக் கொண்டான். என்சமூகத்தினர் அனைவரையும் மூழ்கடித்து விடவேண்டாமென்று கேட்டேன். என்னுடைய இறைஞ்சுதலை ஏற்றுக்கொண்டான். என் சமூகத்தினருகிடையில் சண்டையோ, கொலையோ ஏற்படுத்திவிடவேண்டாம் என்று என் இறைவனிடம் இறைஞ்சினேன், அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான்' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சஹாபாக்கள் மௌனமானார்கள்.

## 28-ஆவது சந்திப்பு

# 33. சிந்தும் இரத்தம் நிலத்தில் விழாமல் தடுத்ததேன்?

''தாயிப்'' நகரம். இது அரேபியாவில் மக்காவிலிருந்து சுமார் 73 மைல் தூரத்தில் அமைந்திருக்கும் ஒரு நகரம். மக்காவில் குரைஷிக்குஃப்பார்களின் தொல்லைகள் அதிகமாக பெருகியிருந்ததால் தாயிப்பிற்குச் சென்றாவது இஸ்லாமிய

போதனைகளை சொல்லலாம் என்று எண்ணி புறப்பட்டார்கள். கூடவே தங்களுடைய வளர்ப்பு மகனார் ஜைது (ரலி) அவர்களையும் அழைத்துச் சென்றிருந்தார்கள். செல்வதற்கு வாகனம் கூட இல்லாது மக்காவிலிருந்து தாயிபுக்கு கால் நடையாகவே சென்றார்கள்.

ஆவலோடு தாயிபுக்குச் சென்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது, நல்ல வரவேற்பு கிடைக்கும் என்று நம்பியவருக்கு அவமரியாதைதான் கிடைத்தது. அதுவும் அங்கு கிடைத்த அன்பளிப்புகள் கல்லடியாகத் தானிருந்தது. சிறுவர்களிடம் கற்களைக்கொடுத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஓட ஓட விரட்டி அடிக்கச் சொன்னார்கள் தாயிப் நகரத்து பெரியவர்கள். பைத்தியக்காரன், பைத்தியக்காரன் என்று விரட்டினார்கள். கல்லடியின் வேதனையைத் தாங்காது திசை தெரியாது ஓடினார்கள். களைப்பின் மிகுதியால் சிறிது நேரம் உட்காரலாமென்றால் அதற்கும் விடவில்லை அந்த பாதகர்கள். அங்கும் கற்களே பறந்து வந்தது.

வெண்ணிற மேனியில் கல்லடிப்பட்டதும் இரத்தம் பீறிட்டு வெளி வந்தது. இரத்தம் வழிய வழிய தலையைக் குனிந்து கொண்டே ஓடினார்கள். அப்பொழுது {உடலிலிருந்து வழியும் இரத்தத்துளிகளை கீழே வழிய விடாமல் கைகளினால் மேனியிலேயேத் துடைத்துக் கொண்டே ஓடினர். ஊரை விட்டு வெகு தூரம் ஓடினார்கள். கூடவந்த ஜைது (ரலி) அவர்களுக்கும் கல்லடிபட்டு முகத்தில் இரத்தம் கொப்பளித்தது. இரத்தக்காயங்களுடன் இருவரும் வேகமாக தள்ளாடி தள்ளாடிய படியே ஓடி ஊரின் ஒதுக்குப் புறத்துக்கே வந்து விட்டனர். மயக்கமடையக் கூடிய நிலையில் மூர்சிரைக்க ஓடிவந்த சம்பவத்தை பின்னால் நினைவு கூரும்பொழுது 'நான் தாயிபிலிருந்து மூன்று கல் தொலை ஓடிவந்தேன். நான் மிகவும் காயப்பட்டு மயக்கமுற்ற நிலையில் ஓடி வந்ததால் நான் எங்கிருந்து ஓடி வருகிறேன். எதை நோக்கி ஓடுகிறேன் என்பதை அப்பொழுது என்னால் அறியமுடியவில்லை'



என்று சொன்னார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கல்லடிக் காயங்களுடன் ஓடி வந்து மக்கா வாசி ஒருவரின் தோட்டத்தின் எல்லையை அடைந்ததும் துரத்தி வந்த தாயிப் வாசிகளும் திரும்பி சென்று விட்டனர்.

அந்நிலையில் இறைவனிடம் இறைஞ்சினார்கள். ''இறைவா! இந்த மக்களை என்மீது கொண்ட வஞ்சினத்திற்காக அவர்களை அழித்துவிடாதே! இவர்கள் என்னை வெறுத்தொதுக்கலாம். ஆனால் இவர்களுடைய சந்ததிகளாவது என்னை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கட்டும். அறியாத இந்த மக்களைத் தண்டித்துவிடாதே'' என்ற கருத்துடைய பிரார்த்தனை செய்தார்கள்.

''கல்லடிப்பட்டு இரத்தம் கசிந்து வரும்போது அதை மேனியிலேயே பூசிக்கொண்டதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்ட பொழுது ''என்னுடைய மேனியில் கல்லடிப்பட்டு இரத்தத்துளிகள் புறப்பட்டதும் அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) அவர்களை அங்கு அனுப்பி விட்டான். முஹம்மதே! உங்களது மேனியிலிருந்து வெளிப்படும் இரத்தத்தில் ஒரு துளியாவது இந்த பூமியில் விழுந்து விட்டால் இந்த தாயிப் நகரைத் தலைகீழாக புரட்டி அழித்து விடும்படி இறைவன் கட்டளையிட்டு இருக்கிறான்'' என்று சொன்னார்கள். அதனைக் கேட்டு எங்கே என் மேனியிலிருந்து ஒரு சொட்டு இரத்தமாவது விழுந்து விடுமோ என்ற அச்சத்தால் தான் கீழே விழுந்து விடாமல் என் மேனியிலேயே துடைத்துக்கொண்டேன்'' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செசனனார்கள்.

இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட சஹாபிகளுடைய கண்களும் கண்ணீரைச் சிந்தின.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீனுக்காக எந்த அளவிற்குப் பாடுபட்டார்கள் என்பதை அறியும் பொழுது நமது கண்கள் மட்டும் கண்ணீரை சிந்தவில்லை. என் இதயமும் இரத்தத்தைக் கசியவைக்கிறது.

## 29-ஆவது சந்திப்பு

# 34. திடீரென்று ஏன் ஸலாம் சொன்னார்கள்?

உஹது யுத்தம் முடிந்த சில நாட்களில் ''ஸுஃப்யான் இப்னு காலித்'' என்னும் பெயருடையவன், ''அலுல்காரா'' என்ற வமிசத்தைச் சார்ந்த சிலரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்திலேயே அனுப்பிவைத்தான் வந்தவர்கள் தாங்கள் முஸ்லிம்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார்கள். எனவே தங்களுடைய பகுதியில் திருமறையைக் கற்றுத்தருவதற்கும் இஸ்லாத்தைப்பற்றி பிரச்சாரம்செய்யவும் சிலரை அனுப்பி வைக்கும்படி முறையிட்டனர். அப்படி அனுப்பப் படும்போது குறிப்பாக சிலரை விரும்பி அழைத்தனர். அப்படி அழைக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் ஹஜ்ரத் குபைப் இப்னு அத்தீ (ரலி) என்னும் சஹாபியாவார்.

கோரிக்கை விடுத்தவர்களின் விருப்பத்திற்கேற்ப நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் பேச்சை நம்பி பத்து பேர்களை அனுப்பி வைத்தார்கள். அவ்விதம் அழைத்துச் செல்லப்படும் பொழுது வழியில் தாங்கள் முன்னமேயே ஏற்பாடு செய்து வைத்திருந்த ஆட்கள் முஸ்லிம்களைத் தாக்கினார்கள். திடீர் தாக்குதலில் சஹாபிகளில் எட்டுபேர்கள்ஷஹீதானார்கள். மற்ற இருவரைக் கைது செய்து தங்கள் இருப்பிடத்திற்குக் கொண்டு சென்றார்கள், நயவஞ்சகமாக இவ்விதம் நாடகம் ஆடி ஏமாற்றி விட்டார்களே என்று பதைபதைத்தனர் மற்றஇரண்டு சஹாபிகள். எனினும் கைதிகளாக அவர்களிடம் சிக்கியிருந்ததினால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

சில நாட்கள் கடந்தன. இதைப்பற்றிய செய்தியறியாமலிருந்தது. ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் பொழுது திடீரென்று ''வஅலைக்குமுஸ்ஸலாம் யா குபைப்'' என்று சப்தமாக, உணர்ச்சி வசப்பட்டவாறு சலாம் சொன்னார்கள். திடீரென்று இவ்விதமாக உரக்கமாக சப்தமிட்டதைக் கேட்டு சஹாபாக்களே திடுக்கிட்டனர். சலாம் சொன்னதற்குக் காரணம் என்ன என்று சஹாபாக்கள் கேட்பதற்குள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே காரணத்தைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.



''தோழர்களே! குபைப் கொல்லப்பட்டு விட்டார். அவர் எனக்கு இறுதி ஸலாம் சொன்னார். அதற்காகத்தான் நான் பதில் ஸலாம் சொன்னேன்'' என்ற கருத்தைச் சொல்லும் பொழுது எல்லோருடைய இதயமும் அழுதது.

உஹது யுத்தத்தில் தன்னுடைய தந்தையைக் கொன்றதற்காக பழிவாங்கப்பட வேண்டுமென்பதற்காக ஹஜ்ரத் குபைப் (ரலி) அவர்களை தூக்கிலேற்றி ஈட்டிகளினால் குத்தி சித்திரவதை செய்து சாகடித்துள்ளார்கள். எனினும் தீனுக்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தங்களுடைய உயிரை இன்முகத்துடன் சந்தோஷமாக எவ்விதம் தியாகம் செய்கிறேன் என்பதை அவர் காணாமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தில் தான் இறுதியாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்து ''அஸ்ஸலாமு அலைக்கும் யாரசூலல்லாஹ்!'' என்று கூறியிருக்கிறார். சுமார் நானூறு கிலோ மீட்டருக்கு அப்பால் வெளிப்படுத்திய சலாமுக்குத்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதில் ஸலாம் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்படும்பொழுது மேனியே புல்லரிக்கிறது. அல்லாஹு அக்பர்,

## 30-ஆவது சந்திப்பு

# 35. தொழுகையில் விசித்திர நடவடிக்கை ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் பலவிதமான விசித்திரமான சலனங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அப்படி வெளிப்படுத்தப்படும்பொழுது சஹாபாக்கள்

மிகவும் ஆச்சரியமடைந்து விடுவார்கள். அப்படி ஆச்சரிய மடைந்த சம்பவங்களில் சிலதை மட்டும் இங்கே குறிப்பிடு கிறோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தடவை தொழுது கொண்டிருக்கும்பொழுது திடீரென்று முன்புறம் குனிந்து கையை நீட்டினார்கள், இன்னொரு சமயம் திடீரென்று பின் புறம் சாய்ந்தார்கள். புரியாத புதிரின் காரணத்தை அன்னாரே வெளிப்படுத்தினார்கள். அதாவது ''நான் தொழுது கொண்டிருக்கும்பொழுது என் எதிரே சுவர்க்கம் காட்டப்பட்டது. அந்த சுவர்க்கத்துச் சோலைகளிலுள்ள மரங்களிலுள்ள கனிகளைப் பறிப்பதற்காகக் கையை நீட்டினேன். அது மறைந்துவிட்டது. அதேபோல தொழுதுகொண்டிருக்கும் பொழுது நரகத்தைக் காட்டப்பட்டது. அதன் நெருப்பின் வெப்பத்தின் காரணமாகவே பின்னால் சாய்ந்தேன்'' என்ற கருத்தை வெளியிட்டார்கள்.

மேலும் ஒரு சம்பவத்தை ஹதீதின்வாயிலாக அறியலாம்:

''நிச்சயமாக, அல்லாஹ்வுடைய விரோதி இப்லீஸான வன் தீப்பொறிகளைக் கொண்டுவந்து என் முகத்தில் போட முனைந்தான். எனவே நான் 'உன்னை விட்டும் அல்லாஹ் விடம் பாதுகாவல் கோருகிறேன்' என்று மூன்று முறை கூறினேன். பின்னர் நான், 'அல்லாஹ்வின் பரிபூரணமான சாபத்தைக்கொண்டு நான் சபிக்கிறேன்'' என்றும் கூறினேன். எனினும் அவன் மூன்று முறை கூறியும் பின்னடையவில்லை. எனவே நான் அவனைப் பிடிக்க நாடி (கையை நீட்டி)னேன். ஆனால் அல்லாஹ்வின்மீது ஆணையாக, என் சகோதரர் சுலைமான் (அலை) அவர்களுடைய ஓர் இறைஞ்சுதல் இல்லாதிருப்பின் காலையில் அவன் கட்டப்பட்டிருப்பான். மதீனா வாசிகளின் சிறுவர்கள் அவனிடம் விளையாடிக்கொண்டிருப்பர் என கூறினர்.

ஆதாரம்: முஸ்லிம், நஸயீ

—★—

### 31-ஆவது சந்திப்பு

# 36. மூவரில் ஒருவருக்கு மட்டும் நாணம்கொண்டது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மனைவியரும், முஃமின்களின் அன்னையருமான ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய இல்லத்தில் இருந்தனர். அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களுடைய விரிப்பில் ஒருக்கணித்துச் சாய்ந்து படுத்திருந்தனர். அவர்களின் மீது போர்வையுமிருந்தது. அதே சமயம் அன்னாரின் கீழ் ஆடையும் முழங்கால் வரை சற்று மேலே ஏறியிருந்தது. அவ்வமயம் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் இல்லத்திற்குள் உள்ளே வர அனுமதி கோரினர். அதற்கு அனுமதியும் கொடுத்தனர். அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் உள்ளே வந்தனர். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நிலையில் சாய்ந்து படுத்திருந்தார்களோ அதே நிலையில் படுத்திருந்தவாறே உரையாடினர். வந்த காரியத்தை பேசிவிட்டு சென்று விட்டார்கள், அபூபக்கர் சித்தீக் (ரலி).

சற்று நேரத்திற்குப்பின் உமர்(ரலி)அவர்கள் வந்து அனுமதி கோரி நின்றனர். அவர்களையும் உள்ளே வர அனுமதி வழங்கினர். சில விஷயங்களைப் பற்றிப்பேசிக் கொண்டிருந்தனர். வந்த காரியத்தை பேசி முடித்துக் கொண்டு விடை பெற்றுச் சென்று விட்டார் உமர் (ரலி). ஆனால் முன்பிருந்த அதே நிலையிலேயேதானிருந்தனர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அடுத்ததாக உஸ்மான் (ரலி) அவர்களும் வந்து உள்ளே வர அனுமதி கோரினார்கள். வெளியே நிற்பது உஸ்மான் (ரலி) என்பதை அறிந்தவுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து அமர்ந்து, தங்கள்மீது ஆடைகளை ஒழுங்கு படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், தங்கள் மனைவியர் ஆயிஷா (ரலி) அவர்களிடமும் ''ஆடையை ஒழுங்கு படுத்திக் கொள்' என்று கூறி துரிதப்படுத்தினர். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு உள்ளே வர அனுமதி வழங்கினர்.

வந்த வேலையை முடித்துக் கொண்டு திரும்பியதும் ''நாயகமே! தாங்கள் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பதற்ற முற்றதைப் போல அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும், உமர் (ரலி) அவர்களுக்கும் பதற்றமுறக் காணவில்லையே அது ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா யா ரசூலல்லாஹ்!'' என்று கேட்டார்கள் ஆயிஷா (ரலி) அவர்கள். அதனைக் கேட்டதும் புதிரின் விடையை அவிழ்த்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். ''ஆயிஷாவே! நிச்சயமாக, உஸ்மான் (ரலி) அவர்கள் அதிக நாணமுள்ளவர்கள் அன்றி, நான் இருந்த அதே நிலையில் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தால் அவர்கள் வந்த அலுவலை அவர்களால் முடித்துக் கொள்ள இயலாமலாகி விடும் என்று அஞ்சிய காரணத்தினாலேயே அவ்விதம் துரிதப்படுத்தினேன். மேலும் வானவர்கள் நாணமுறும் ஒருவரிடம் நான் நாணமுற வேண்டாமா?'' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியிட்டார்கள்.

(ஆதாரம்:-ஆயிஷா (ரலி) அவர்களால் ஹதீஸ்முஸ்லிமில் பதியப்பட்டதை ஆதாரமாகக் கொண்ட சம்பவம்)

—★—

### ௩௨-ஆவது சந்திப்பு

## 37. பூரண விஸ்வாசம் இல்லை என்று கூறியதேன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒரு நாள் உமர் (ரலி) அவர்களும் நெருங்கியிருந்தார்கள். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களின் கரங்களைப் பற்றியிருந்தார்கள். அப்பொழுது உணர்ச்சி வசப்பட்டவர்களாக ''நாயகமே நிச்சயமாக, தாங்கள் என்னிடம் எல்லா பொருட்களையும் விட உவப்பானவர்களாக இருக்கின்றீர்கள் என் உயிரைத் தவிர' என்று கூறினார்,



அதனைக் கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிருப்தியுற்ற நிலையில் ''உமரே! உங்களிடம் பூரண விஸ்வாசம் இல்லை,'' என்று கூறினர். அதனைக் கேட்டதும் உமர் (ரலி) அவர்களுக்கு மிகவும் சங்கடமாகி விட்டது'' என்னுடைய உயிரைத் தவிர மற்ற எல்லாப் பொருட்களையும்விட அதிகமாக நேசிக்கின்றேன்'' என்று சொல்லியும் கூட பூரண விஸ்வாசமில்லை' என்று கூறக் காரணமென்ன என்று குழம்பி நின்றிருந்தார். ''ஏன் அவ்விதம் கூறுகின்றீர்கள் யாரசூலல்லாஹ்!'' என்று கேட்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமயம் நபிகள் நாயகம் (ஸல்) உமர் (ரலி) அவர்களின் கவலை தோய்ந்த முகக் குறிப்பைக் கண்டு புதிரின் ரகசியத்தைத் திறந்தார்கள்.

''உமரே! எவன் கைவசம் என் உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக, உம்முடைய உயிரைவிட நான் உங்களுக்கு மிகவும் உவப்பானவனாக ஆகாத வரை உம்முடைய விஸ்வாசம் பரிபூரணமானதல்ல'' என்ற கருத்தைச் சொன்னதும் அதே வினாடி ''யாரசூலல்லாஹ்! இப்பொழுது தாங்கள் நிச்சயமாக என்உயிரைவிடவும் மிகவும் உவப்பானவர்களாக இருக்கின்றீர்கள்'' என்று உணர்ச்சி மேலிட கூறினார்கள் உமர் (ரலி) அவர்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'உமரே! இப்பொழுதுதான் நீர் பரிபூரணமான விஸ்வாசத்தை அடைந்தீர்'' என்ற கருத்தைக்கூறினர்.

உமர் (ரலி) அவர்கள் அகமகிழ்ந்தார்கள்.

ஆதாரம்;- இச்சம்பவத்தின் கருத்து அப்துல்லாஹ் இப்னு ஹிஷாம் (ரலி) அறிவித்ததாக புகாரியில் பதிவாக்கப் பட்ட ஹதீதின் அடிப்படையைக் கொண்டது]

—★—

## 33-ஆவது சந்திப்பு

# 38. ஏன் அழுதார்? ஏன் சிரித்தார்?

மக்கா நகர் வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அருமை மகளார் பாத்திமா (ரலி) அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது முஃமின்களின் அன்னையரான ஆயிஷா (ரலி) அவக்களும் உடன் இருந்தார்கள். எனினும் அவர்கள் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மகள் பாத்திமா (ரலி) அவர்களை நெருங்கிவர அழைத்தார்கள். தங்கள் வாயினருகே அவர்களின் காதை கொண்டு வரும்படி சொன்னார்கள். அதே போல பாத்திமா (ரலி) அவர்களும் மிக நெருங்கி நின்றார்கள். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாத்திமா (ரலி) அவர்களுடைய காதில் ஏதோ ரகசியமாகக் கூறினார்கள். அதனைக் கேட்டதும் பாத்திமா (ரலி) அவர்களுடைய முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன. கண்களில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது. ஆறுதலைக் கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுது கொண்டிருந்த தம்மகளாரை அழைத்து மீண்டும் காதில் ஏதோ ரகசியத்தைக் கூறினார்கள். அதனைக் கேட்டதும் முகம் மலர்ந்தது. சிரித்தும் விட்டார்கள். ஒன்றைச் சொல்லும் போது அழுதார்கள்; இன்னொன்றைச் சொல்லும்போது சிரிக்கிறார்களே. அப்படியானால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன சொன்னார்கள் என்ற கேள்விக் குறிகளோடு புரியாதவர்களாக அதை கவனித்துக் கொண்டிருந்தார்கள் ஆயிஷா (ரலி) அவர்கள். எனினும் அது என்ன ரகசியம் என்பதைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமோ, பாத்திமா (ரலி) அவர்களிடமோ கேட்கவில்லை.

நாட்கள் கடந்தன.



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடல் நலமின்ற மரணம் எய்தினார்கள், அதன் பின் சில நாட்கள் கழித்தபின் தான் ஆயிஷா (ரலி) அவர்கள் ''அன்று தங்களுடைய காதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய ரகசியம் என்ன? எதற்காக முதலில் அழுதீர்கள்? எதற்காக பிறகு சிரித்தீர்கள்?' என்று பாத்திமா (ரலி) அவர்களிடம் கேட்டார். இத்தனை நாட்கள் மனதின் ஆழத்திலேயே மறைத்து வைத்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன புதிரான ரகசியத்தை அன்று வெளிப்படுத்தினார்கள்.

''அன்று எனதருமை தந்தையவர்கள் என்னை அழைத்து என்னுடைய காதில் ரகசியமாக இரண்டு விஷயங்களைச் சொன்னார்கள். முதலில் எனதருமை தந்தையின் மரண காலம் நெருங்கி விட்டது என சொன்னார்கள். அதனைக் கேட்டதும் துக்கம் தாளாமல் அழுது விட்டேன். அடுத்ததாக 'நிச்சயமாக நீ சுவனவாசிப் பெண்களுக்கெல்லாம் தலைவியாக இருப்பாய்-மர்யம் பின்து இம்ரானைத் தவிர' என்று நன்மாறாயம் கூறினார்கள். எனவே நான் சிரித்து விட்டேன்'' என கூறினார்கள் பாத்திமா (ரலி).

ஆதாரம்:- திர்மிதியில் உம்முஸல்மா (ரலி) அவர்களால் பதிவாக்கப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் கொண்டது.

## 34-ஆவது சந்திப்பு

# 39. பத்ருப் போர் அன்று ஏதை அதிசயமாகப் பார்த்தார்கள்?

இஸ்லாத்திற்காக செய்த தற்காப்பு போர்களில் முதல் போர்தான் பத்ருப் போர் என்பதை உலகறியும். ஏகத்துவக் கொள்கைக்கும் நிராகரிப்போருக்கும் இடையில் நடந்தபோர் அது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய படையில் வெறும் முன்னூற்றுப் பதிமூன்று பேர்களே இருந்தனர். ஆனால், எதிரிப் படைகளில் ஆயிரம் பேர்களிருந்தனர்.

மேலும் பலநாட்கள் திட்டமிட்டு அபூஜஹலின் தலைமையில் வந்ததினால் அதிகமான ஆயுதங்களையும் தேவையான பொருட்களையும் எதிரிகள் கொண்டு வந்திருந்தனர். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய படையிலோ விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே ஆயுதங்களிருந்தன.

இன்னும் சிறிது நேரத்தில் போர் ஆரம்பமாகப் போகிறது. இந்த எதிரிகளின் பெரிய படையோடு இஸ்லாமியர்களின் சின்னப்படை மோதுவதற்குத் தயாராக இருந்தது. இறைவனின் உதவிக்காக அன்றிரவு முழுவதும் உறங்காமல் இறைவனிடம் இறைஞ்சியிருந்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

அன்று யுத்தம் நடக்கும்நாளன்று சஹாபாக்கள் சுறுசுறுப்புடன்இயங்கிக்கொண்டிருந்தார்கள். அந்தவேளையில் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் புன்முறுவலுடன் எதிரே ஓரிடத்தைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள். ஆனால் எதைபார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறியாத சஹாபிகள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் புதிரின் காரணத்தை கேட்க விரும்பினர். அதற்குள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே புதிரின் விடையை வெளியிட்டார்கள்.

''இதோ ஜிப்ரீல்(அலை)அவர்கள் தங்களின் குதிரையின் தலையை (கடிவாளத்தோடு)பிடித்துக்கொண்டு போர் ஆயுதங்களை அணிந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறினர். அதனைக் கேட்டதும் ஸஹாபிகளுக்கு மகிழ்ச்சியுண்டாயிற்று. உள்ளத்தில் ஈமானின் உத்வேகம் எழுந்தது. வெற்றி நிச்சயம் என்ற நிலையில் உறுதியுடன் போர் செய்யத்தயாரானார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்.

—★—

## 35-ஆவது சந்திப்பு

# 40. அண்ணல் நபி (ஸல்) சொன்ன மரம் எந்த மரம்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறை நம்பிக்கையாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் சஹாபாக்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டனர். அச்சமயம் அந்தக் கூட்டத்தில் உமர் (ரலி) அவர்களும், அன்னாரின் மகனார் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களும் மற்றுமுண்டான சஹாபிகள் பலரும் அமர்ந்திருந்தனர். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை நோக்கி'நம்பிக்கையாளரை ஒரு பசுமை மரத்திற்கு நிகராகக் கூறலாம், அதனுடைய இலைகளும் ஒரு காலும் உதிர்வதில்லை. அதனின் நிழலும் நீங்குவதில்லை. அதனுடைய பழங்கள் முஸ்லிம்களிடையே அதிகமாக புழங்கப்பட்டு வருகிறது. அது என்ன மரம்? என்ற கருத்தைக் கேட்டார்கள். அதைக் கேட்ட சஹாபிகளுடைய உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் உண்டாயின. எந்த மரத்தைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லுகிறார்கள் என்று சஹாபாக்கள் சிந்தனையில் மூழ்கியிருந்தனர். நேரம் நகர்ந்து கொண்டேவிருந்தது. யாரும் பதில் சொல்லவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தனர். இறுதியாக ''அது என்ன மரம் என்பதை எங்களுக்கு அறிவித்துக் கொடுங்கள் யாரசூலல்லாஹ்?' என்று சில சஹாபிகள் கேட்டனர்,

அதனையடுத்து நபிகள் நாயகன் நாயகம் (ஸல்) அவர்களும் புதிரின் ரகசியத்தை வெளியிட்டார்கள்''அஃது பேரீச்சை மரம் தான்'' என்று சொன்னார்கள். அதனைக் கேட்டதும் சஹாபிகள் மகிழ்ச்சியுற்றார்கள். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் தங்கள் தந்தையிடம் ''தந்தையே! அஃது பேரீச்சை மரம் தான் என்று எண்ணினேன், ஆனால் நாணத்தின் காரணமாக ரசூல் (ஸல்) அவர்களிடத்தில் எடுத்துரைக்க

வில்லை' என்றார்கள். அதனைக் கேட்டதும் உமர்(ரலி)அவர்கள் 'மகனே! ரசூல்(ஸல்) அவர்கள் கூறுவதற்கு முன் நீ கூறியிருந்தால் நான் மிக்க மகிழ்ச்சியடைந்திருப்பேன், எவ்வளவு செல்வங்கள் எனக்குக் கிடைத்திருப்பினும் அவ்வளவு மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டிருக்காது' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்கள்.

ஆதாரம்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களால் ரிவாயத்து செய்யப்பட்ட ஹதீது புகாரியில் பதிவாக்கப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் கொண்டது.)

### 36-ஆவது சந்திப்பு

## 41. கிழவிகள் சுவர்க்கம் செல்ல மாட்டார்கள் ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு வயதான கிழவி ஒருவர் வந்து ''யாரசூலல்லாஹ் நாங்கள் சொர்க்கம் செல்ல முடியுமா? ' என்று கேட்டார், அந்த தள்ளாத வயதுமுதிர்ந்த அம்மையாரைப் பார்த்ததும் புன்முறுவல் பூத்து ''கிழவிகள் சொர்க்கத்திற்கு செல்ல முடியாது'' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்தபடியே கூறினர். அதனைக் கேட்டதும் அந்த வயதான அம்மையார் அழத் துவங்கிவிட்டார், 'கிழவிகள் சுவர்க்கம் செல்லமுடியாது என்று முஹம்மது (ஸல்) அவர்களே கூறிவிட்டார்களே' என்று மிகுந்த கவலையுடன் கண்களில் கண்ணீர் வழிய அழுது கொண்டே திரும்பி சென்றார், சில எட்டுகள் எடுத்து வைத்ததும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அம்மையாரை அழைத்தார்கள். அன்னாரின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது. ஏன்தன்னை அழைக்கிறார்என்றகேள்விக்குறியோடு திரும்பி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரில் அந்த அம்மையார் வந்து நின்றார். சஹாபிகளுக்கும் ஆச்சரியமாகி விட்



டது. எதற்காக மீண்டும் அழைக்கிறார் என்று அவர்களுக்கும் புரியாது விழித்தனர். அந்த நிலையில் புதிரின் ரகசியத்தை அண்ணலார் வெளியிட்டார்கள்.

''தாங்கள் தான் கிழவிகள் சுவர்க்கம் செல்லமாட்டார்கள் என்று சொல்லிவிட்டீர்களே, யாரசூலல்லாஹ்'' என்று மீண்டும் அந்த வயதான அம்மையார் கூற, அதனைக்கேட்டதும் ''வயதான கிழவிகள் ஒருபோதும் சுவர்க்கத்திற்குள் நுழைய முடியாது; அவர்கள் அழகிய இளம் கன்னிப்பெண்களுடைய கோலத்தில்தான் சுவர்க்கத்திற்குள் நுழைவார்கள். எத்தகைய வயதுடைய பெண்ணாக இருப்பினும் அவர்கள் எல்லோரும் சுவர்க்கத்திற்குள் நுழையும் போது இளம்வயது பெண்களைப் போன்று இறைவன் ஆக்கிவிடுவான். எனவே தான் கிழவிகள் சொர்க்கத்திற்குள் செல்ல மாட்டார்கள் என்று சொன்னேன்'' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்தப்படியே கூறிய பொழுது அந்த கிழவியும் மகிழ்ந்து போனார்கள். கூடியிருந்த சஹாபாக்களும் சிரித்து விட்டனர். சிரித்துக் கொண்டே செல்லும் அந்த கிழவியைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

### 37-ஆவது சந்திப்பு

## 42. பேராச்சரியம் அடைந்ததற்குக் காரணமென்ன?

ஒவ்வொரு தடவையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புதிருக்குண்டான விடைகளைப்பகர்கின்ற பொழுது சஹாபாக்கள் ஆச்சரியமடைவார்கள். அதேபோல நபிகள் நாயகம் (ஸல்)அவர்களும் பேராச்சரியத்தை அடைந்த சம்பவங்களும் உண்டு. அப்படிப்பட்ட சம்பவங்களில் ஒன்றுதான், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் தந்தையரின் இறப்பு விஷயத்தின் போதுபேராச்சரியம் அடைந்திருந்தார்கள். அன்னார் உஹதுப் போரில் ஷஹீதாகியிருந்தார். தந்தையவர்

களின் மரண செய்தி சஹாபியினுடைய உள்ளத்தை மிகவும் பாதித்து விட்டிருந்தது. அதனால் மிகவும் கவலையாக இருந்தார். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு வகையில் மிகவும் பிரகாசமாகத் தெரிந்தார்கள். சஹாபியின் விஷயத்தில் மனம் சந்தோஷத்தோடும் காணப்பட்டார்கள்.

சஹாபியைப் பார்த்து ஆறுதல் சொல்லி வருவதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபியின் இல்லம் சென்றனர். சஹாபி மிகவும் துக்கத்தோடு இருந்ததைப்பார்த்ததும் 'உமக்கென்ன நேர்ந்து விட்டது. உம்மை நான் மன ஆறுதல் பெற்றவராகக் காணவில்லையே'' என்ற கருத்தைக் கேட்டனர். அதற்கு அந்த சஹாபி 'உஹது போரில் என் தந்தை வீர மரணம் எய்திவிட்டார். மேலும் அவர் பெரும் குடும்பத்தையும், கடனையும் விட்டுச் சென்றிருக்கிறார். அதனால் நான் பெரிதும் துக்கமுற்றுள்ளேன் யா ரசூலல்லாஹ்!'' என்று கூறினார். அதனைக் கேட்டதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''உம்முடைய தந்தை அல்லாஹ்வை எவ்விதம் சந்தித்தார் என்பதுபற்றி நான் உனக்கு நன்மாராயம் கூறவா?'' என்று கேட்டார்கள். அதற்கு அந்த சஹாபி ஆவலுடன் ''ஆம் அறிவியுங்கள் நாயகமே'' என்று பதிலளித்தார். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சஹாபியின் விஷயத்தில் பேராச்சரியம் அடைந்த புதிரின் ரகசியத்தை அங்கே வெளிப்படுத்தினார்கள்.

''அல்லாஹ் திரை மறைவிலிருந்தே தவிர (நேரிடையாக) எவரிடமும் உரையாடியதில்லை. ஆனால் அவன் உமது தந்தைக்கு உயிர்கொடுத்து எழுப்பி அவர்களுடன் நேரடியாக (வே) உரையாடினான். அப்பொழுது அவன், ''என் அடியானே! என்னிடம் எதையேனும் கேள். நான் உனக்குத் தருகிறேன்' என்று கேட்டான். அதற்கு அவர்கள் 'இறைவனே! (மறு முறையும்) எனக்கு உயிர் கொடுத்து (உலகில் அனுப்பி) விடு; மறு முறையும் (இஸ்லாத்திற்காக) உயிர்த்தியாகம் செய்கிறேன்' என்று கூறினார். அதற்கு இறைவன், 'நிச்சயமாக (மரணம் எய்திய) அவர்கள் திரும்பவும் (உலகிற்குச்)



செல்ல மாட்டார்கள் என்ற என்னுடைய கட்டளை முந்தி விட்டது' என்ற கருத்தை வெளியிட்ட பொழுதுதான் அல்லாஹு தஆலா திருமறையின் 3;169 ஆவது வசனத்தை அருளினான். (விசுவாசிகளே!) அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிந்து) வெட்டப்பட்டோரை இறந்து விட்டவர்களாக நீங்கள் ஒருபோதும் எண்ணிக் கொள்ள வேண்டாம். அவர்கள் தம்முடைய இறைவனிடத்தில் நிச்சயமாக உயிரோடிருக்கிறார்கள். (மேலும்) அவர்களுக்கு உணவும் கொடுக்கப்படுகிறது'

—அல்குர்ஆன் 3:179

என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதைக் கேட்டதும் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்களுடைய கண்களில் கண்ணீர் வரையிட்டிருந்தது. தம் தந்தையாருக்கு அல்லாஹு தஆலா இந்த அளவிற்கு சிறப்பை நல்கியிருக்கிறான் என்பதை நினைத்து உணர்ச்சி மேலிட அழுதே விட்டார்கள்.

ஆதாரம்:- (ஜாபிர் (ரலி) அவர்களால் றிவாயத் செய்யப்பட்டு திர்மிதியில் பதிவாக்கப்பட்டுள்ள ஹதீஸை ஆதாரமாகக் கொண்டது.

## 38. ஆவது சந்திப்பு

# 43. அல்லாஹு அக்பர் என கூறியது ஏன்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ்யுத்தத்தின் பொழுது எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக ஹஜ்ரத் சல்மான் பார்ஸி (ரலி) அவர்களின் யோசனையை ஏற்று அகழ்தோண்டுவதற்கு ஆணையிட்டார்கள். மதீனாவின் ஒருபுறம் மலையும் மற்ற மூன்று புறங்களும் வெட்ட வெளியாக இருப்பதால், அந்த வெட்ட வெளிப்பகுதியில் அகழைத் தோண்டும் பணியில் எல்லா சஹாபிகளும்

இறங்கினர். அவ்வமயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தங்கள் தோழர்களோடு சேர்ந்து மண் சுமந்து சென்றுள்ளார்கள். மேலும் அவர்களும் அந்த சஹாபிகளோடு உற்சாகமாக பணியில் ஈடுபட்டிருந்தனர். உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்த சஹாபிகளுக்குத் தடையாக அகழில் ஒரு பெரும் கல் ஒன்று குறுக்கிட்டது. அதை எவ்வளவோ முயன்றும் உடைக்க முடியவில்லை. இறுதியாக இச்செய்தி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காதுக்கு எட்டியது. எனவே விரைந்து அந்த பெரும் பாறையின் அருகே வந்தார்கள். அருகே ஒரு சஹாபியிடமிருந்த குந்தாலியை வாங்கி அந்த பாறையின் மீது ஓங்கி ஒரு அடி அடித்தார்கள்.

அப்பொழுது பாறையிலிருந்து பளிச்சென்று ஓர் ஒளி வெளிப்பட்டது. அதனைக் கண்டதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''அல்லாஹு அக்பர்'' என்றனர். அதேபோல இரண்டாவது அடிஅடிக்கும் பொழுதும் ஒளி வெளிப்பட்டது. அப்பொழுதும் ''அல்லாஹு அக்பர்'' என்றார்கள். அதேபோல மூன்றாவது முறையும் நடந்தது. பாறை பிளந்தது துண்டாகி விழுந்தது. தடை நீங்கியது.

ஆனால் சஹாபாக்களுடைய உள்ளத்தில் ''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாறையின் மீது அடித்தபொழுது ஒளி புறப்பட்டதற்குக் காரணமும், அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறக்காரணமுமென்ன'' என்பதை அறிய ஆவலோடு இருந்தார்கள். அகழை விட்டு மேலேறி வந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் ஆவலைப்புரிந்துகொண்டவர்களாக புதிரின் ரகசியத்தையும் வெளிப்படுத்தினார்கள்;

''நான் முதலில் பாறையில் அடித்த பொழுது ஒரு ஒளி தென்பட்டது. அந்த ஒளியில் ஷாம் நாட்டிலுள்ள இடங்கள் தெரிந்தன. அதன் சாவிகள் என்னிடம் கொடுக்கப் பட்டது. இரண்டாவது அடிஅடித்த பொழுது ஏற்பட்ட ஒளியில் பாரசீக நாடு தெரிந்தது. அப்பொழுது அதனுடைய சாவிகளும் என்னிடம் கொடுக்கப்பட்டது மூன்றாவதுஅடி அடிக்கப்பட்டபொழுது



ஏற்பட்ட வெளிச்சத்தில் யமன் நாட்டின் இடங்கள் தெரிந்தன. அதனுடைய சாவிகளும் என்னிடம் கொடுக்கப்பட்டன'' என்று கருத்தைச் சொன்னார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை சொல்லி முடித்ததும் ''அல்லாஹு அக்பர்'' என்று சஹாபாக்களிடமிருந்து வந்த ஓசை விண்ணை முட்டியது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் காண்பிக்கப் பட்டதைப்போலவே பின்னால் அந்த முன்னறிவிப்பின்படி நடந்தேறியது.

## 39-ஆவது சந்திப்பு

# 44. அல்லாஹ் ஏன் வியப்புற்றான்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு ஏழையான மனிதர் வந்து, தான் மிகவும் பசியாக இருப்பதாகவும், ஏதேனும் உண்ணுவதற்கு உணவு கொடுக்கும்படியும் கேட்டார். அம்மனிதா மீது இரக்கம் கொண்டு உடனே தங்கள் மனைவியர் ஒருவர் இல்லத்திற்கு ஒரு ஆளை அனுப்பினர். ஆனால் சென்ற நபர் சென்ற வேகத்திலேயே திரும்பி வந்து விட்டார். காரணம் வீட்டில் தண்ணீரைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறியிருந்தனர். எனவே இன்னொரு மனைவியர் இல்லத்திற்கும் ஆளை அனுப்பினாலும் அதேபதில்தான் திரும்பி வந்தது. எனவே தங்களோடு இருக்கும் சஹாபி ஒருவரின் இல்லத்திற்கு அனுப்பி இவரின் பசியை ஆற்றி வைத்து விடலாம் என்ற எண்ணத்தில் இந்த மனிதரை யாரேனும் அழைத்துச் சென்று விருந்து படைக்க விரும்புகிறீர்களா? எவர் இவருடைய பசியை போக்குகிறாரோ அவருக்கு அல்லாஹ்வின் அருள் கிடைக்கும்'' என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதைக் கேட்டதும் அபூதல்ஹா (ரலி) என்னும் சஹாபி முன்வந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதி பெற்று அந்த மனிதரைத் தங்களுடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.'' உண்பதற்கு என்ன இருக்கிறது' என்று மனைவியிடம் கேட்டதற்கு ''என்

மக்களுக்குரிய உணவைத் தவிர வேறு எதுவுமில்லையே'' என்று கூறினார்.

''குழந்தைகளை சாக்குப் போக்குச் சொல்லி அப்படியே உறங்க வைத்து விடு. இருக்கும் உணவை அந்த மனிதருக்கு அளித்து பசியாற்ற வேண்டும். உணவோ குறைவாக இருக்கிறது. எனவே அவர் சாப்பிட அமர்ந்ததும் விளக்கை அணைத்து விடு'' என்றார். அதன்படி அந்த மனிதரின் முன் உணவை வைத்ததும் விளக்கை சரி செய்வது போல விளக்கை அணைத்து விட்டார். எனவே அந்த ஸஹாபி சாப்பிடுவதைப்போல பாவனை செய்து கொண்டு இருந்தார். இருட்டில் ஒன்றும் தெரியாததால் அந்த மனிதரும் அந்த உணவை உண்டு பசியாறினார். அவர் சென்றதற்குப் பின்பு கணவன் மனைவி இருவரும் பட்டினியோடு உறங்கினர். விடிந்ததும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காணச் சென்ற பொழுது அவர்கள் அந்த சஹாபியைப் பார்த்து பெரிதும்வியப்புடன் பார்த்தார்கள். ஏன் அப்படிப்பார்க்கிறார்கள்! என்ற எண்ணம் அபூதல்ஹா (ரலி) உடைய உள்ளத்தில் எழுந்தது. புன்னகையுடன், மகிழ்ச்சிபொங்க அந்தசஹாபியை அழைத்து அமரவைத்தார்கள். காரணம் என்னவென்று அவருக்கும் புரியவில்லை, அன்னாரைச் சுற்றியிருக்கும் சஹாபிகளுக்கும் புரியவில்லை. தாமதம் செய்யாது புதிரின் விளக்கத்தை வெளியிட்டார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

''நீங்கள் நேற்று அந்த விருந்தாளியுடன் நடந்து கொண்ட சம்பவத்தை அல்லாஹு தஆலா பார்த்து வியப்புற்றுள்ளான். மேலும் திருமறையின் 59:9 ஆவது வசனமாகிய 'இவர்கள் ஹிஜ்ரத் செய்து தங்களிடம் வருவோரை அன்புடன் நேசித்து வருவதுடன் அவர்களுக்கு (மட்டும்) கொடுப்பதைப்பற்றித் தங்களின் உள்ளத்தில் சிறிதளவும், பொறாமை கொள்ளாமலும் தங்களுக்கு தேவை இருந்தபோதிலும் தங்களின் பொருளை அவர்களுக்குக் கொடுத்து உதவியும் வருகின்றனர். இவ்வாறு எவர்கள் உலோபத்தனத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்கிறார்களோ அவர்கள் தாம் சித்தி பெற்றவர்கள் என்ற வசனமும் வஹியாக அருளியிருக்கின்றான்!! என்ற செய்தியின் கருத்தை வெளியிட்டார்கள். சஹாபி சந்தோஷத்தால் கண்களில் கண்ணீர் வரவிட்டது.



ஆதாரம்:- (புகாரீ, முஸ்லிம் கிரந்தங்களில் அபூஹுரைரா (ரலி) அவர்களால் ரிவாயத்செய்யப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் கொண்டது.)

## 40-ஆவது சந்திப்பு

# 45. வந்தவர் யார்?

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்தம சஹாபாக்களோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வெண்மையாக உடையணிந்த ஒரு புதிய மனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரே மண்டியிட்டு அமர்ந்தார், அதுவும் முழங்காலுக்கு நேராக இணைத்து நெருக்கமாக அமர்ந்தார். பிறகு தன்னுடைய கைகளிரண்டையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தொடையின் மீது வைத்து சில கேள்விகளைக் கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக பதிலளித்தார்கள். ஒவ்வொரு கேள்வியாக வந்தவர் கேட்க, அதற்குத் தகுந்த முறையில் திருப்திகரமான முறையில் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதில் கூற அவைகளையெல்லாம் வந்தவர் உண்மையென ஏற்றுக்கொண்டார். சிறிது நேரம் கேள்விகள் கேட்டு பதில்களைப் பெற்றுக்கொண்டதின் பின் வந்த மனிதர் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டார். சஹாபாக்களுக்கு பெரும் ஆச்சரியமாகி விட்டது.

வந்த மனிதர் யார்? இதற்கு முன் அவரை யாரும் பார்த்ததில்லையே. மிகவும் அழகான மனிதராக இருந்தார். வெகு

தூரத்திலிருந்து வந்தமனிதர் என்பதற்கு பிரயாண களைப்பும் அந்த மனிதரிடம் காணவில்லையே. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நெருங்கிய தெரிந்த மனிதரைப் போன்று தாராளமாக நெருங்கி அமர்ந்தாரே. இதுவரை சஹாபாக்கள் கேட்டிராத புதுமையான கேள்விகளையெல்லாம் கேட்டிருக்கிறாரே. எங்கிருந்து வந்தார்? எங்கு செல்கிறார்? இவர் யார்? என்ற பல வகையான கேள்விகள் எல்லோருடைய உள்ளத்திலும் எழுந்தன. சஹாபாக்கள் கேட்கும் முன் நபிகள் நாயகம் (ஸல்) அளர்களே புதிரின் விடையைப் பகர்ந்தார்கள்.

வந்தவர் யார் தெரியுமா? அவர்தான் ஜிப்ரீல் (அலை) உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொடுப்பதற்காகவே அவர் வந்தார்'' என்ற கருத்தை மொழிந்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

இந்த சம்பவம் பிரபலமான ஸிஹாஹ் சித்தா ஹதீது கிரந்தங்களில் பதியப்பட்டிருக்கிறது. உங்களுடைய தெளிவுக்காக அதை இங்கே கொடுக்கின்றோம்.

ஒரு தடவை நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்பொழுது ஒருவர் எங்களின் முன் தோன்றினார். அவரின் உடை மிகவும் வெண்மையாகவும், தலைமுடி கருமையாகவும் இருந்தது. அவர் பிரயாணத்தின் காரணமாகக் களைத்துக்காணப்படவில்லை. எங்களில் ஒருவருக்கேனும் அவரைத் தெரியவில்லை. அவர் தம்முடைய முழங்காலை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழங்காலுக்கு நேராக இணைத்து (மண்டியிட்டு) அமர்ந்து (அதன் பின்) தம்முடைய இருகைகளையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொடைமீது வைத்து, 'முஹம்மதே! இஸ்லாத்தைப்பற்றி எனக்கு அறிவியுங்கள்' என்று கூறினார். அதற்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் 'இஸ்லாமாகிறது, உண்மையாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. திட்டமாக முஹம்மது (ஸல்) அவர்கள்



அவனுடைய அடியாரும் திருத்தூதருமாவர் என்று நீர் சான்று பகர்வதும், தொழுகையைக் கடைபிடித்தொழுகுவதும், ஜகாத் கொடுப்பதும், நோன்பு நோற்பதும், உமக்கு ஆற்றல் இருப்பின் ஹஜ்ஜுச் செய்வதுமாகும்' என்றனர். அதற்கு அவர், 'நீங்கள் உண்மையே கூறினீர்கள்' என்றார். அவர் இவ்வாறு வினாவை எழுப்பி விடையையும் உண்மைப் படுத்துவதைக்கண்டு நாங்கள் பெரிதும் வியப்புற்றோம்.

பின்னர் அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி 'இறை நம்பிக்கை (ஈமான்)' பற்றி எனக்கு விளக்குக' என்றார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் வேதங்களையும் திருத் தூதர்களையும் இறுதி நாளையும் நீர் நம்புவதோடு அல்லாமல் விதியின் நன்மை தீமைகளைப்பற்றி நீர் நம்பிக்கைக் கொள்வதுமாகும் என்றனர். அதற்கு அவர் 'நீங்கள் உண்மையே கூறினீர்கள்' என்றார். மேலும் அவர், 'இஹ்ஸானைப்பற்றி எனக்கு அறிவியுங்கள்' என்றார். அதற்கு அவர்கள், 'உண்மையாக நீர் அல்லாஹ்வைப் பார்ப்பதுபோன்று அவனை வணங்குவதாகும். 'உம்மால் அவனைப் பார்க்க இயலாத போதினும் அவன் உம்மைப் பார்க்கின்றான்' என்ற எண்ணத்தில் வணங்குவதுமாகும்' என்றனர். மீண்டும் அவர் 'மறுமையைப்பற்றி எனக்கு அறிவியும்' என்றார். அதற்கு அவர்கள் 'இதுபற்றி வினவுகின்றவரைவிட விடை பகர்பவர் மிகவும் அறிந்தவரல்ல என்று திருவாய் மலர்ந்தனர். 'அதன் அடையாளங்களை(ப்பற்றியாவது) எனக்கு அறிவியுங்கள் என்றார் அவர். அதற்கு நபி நாயகம் (ஸல்) அவர்கள் 'வேலைக்காரி (அடிமைப்பெண்) எசமானை ஈன்றெடுப்பாள். திறந்த மேனியும் தலையுமாய் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தவன் மாபெரும் மாடமாளிகைகளைக் கட்டுவதை நீர் காண்பீர் என்றனர். அத்துடன் அவர் சென்று விட்டார். அதன்பின் சற்றுநேரம் நாங்கள் அங்கு அமர்ந்திருந்தோம். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை நோக்கி 'உமரே வினா எழுப்பிய

வர் எவர் என்பதை நீர் அறிவீரா? என்று வினவினர். அதற்கு நான் 'அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதரும் மிக அறிந்தவர்கள்' என்றேன். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'அவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஆவார். உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொடுப்பதற்காகவே அவர் வந்தார்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்: யஹ்யா இப்னு யஃமுர் (ரலி)

ஆதாரம்; முஸ்லிம், அபூதாவூத், முஅத்தா, திர்மதீ, நஸயீ.

—★—

## 46. சஹாபாக்களைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்)

''நாயகத் தோழர்கள்'' என்று சிறப்பித்துக் கூறப்படும் சஹாபாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இறுதிக்காலத்தில் ஒரு லட்சத்தி இருபத்து நான்காயிரம் பேர் இருந்ததாக வரலாற்றுக் கிரந்தங்களில் குறிப்புகள் காணப்படுகிறது. அதில் குறிப்பாக சில சஹாபிகளைப்பற்றி அன்னார்சிறப்பித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப்பின்னணியாக பல காரணங்களும் அடிப்படையாக இருந்தன. சஹாபாக்கள் எல்லோருமே சம அந்தஸ்தையுடையவர்கள் தான். அதில் ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. அதே சஹாபாக்களுக்கு அடுத்த நிலையிலிருக்கும் ''தாபியீன்கள்'' என்று சொல்லப்படும் நல்லோர்கள். இவர்கள் நேரிடையாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் நாயகத் தோழர்களான சஹாபாக்களைப் பார்த்தவர்கள். நபிகள் நாயகத்தை நேரடியாகப் பார்த்தவர்களையும், அப்படி பார்த்தவர்களைப் பார்த்தவர்களும் இறைவனின் கண்ணியத்தைப் பெற்று விட்டார்கள்.



''என்னை நேரில் கண்ட முஸ்லிமையும், அவரை எவர் கண்டாரோ அவரையும் நரகம் தீண்டமாட்டாது' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்:- ஜாபிர் (ரலி)

ஆதாரம்;- திர்மிதி

மேலும் சஹாபாக்களுடைய அந்தஸ்தைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயர்வாக சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள். ''என் தோழர்களை ஏசாதீர்கள். ஏனெனில் நிச்சயமாக எவன் கைவசம் என் உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக, உஹத் மலையளவு தங்கத்தை எவர் தர்மம் செய்த போதிலும் அவர்களில் ஒருவருடைய நன்மையையும் அவர் அடையப் போவதில்லை' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்-- அபூஹுரைரா (ரலி)

ஆதாரம்;- முஸ்லிம்.

''சஹாபாக்கள் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் எந்த சஹாபியைப் பின்பற்றினாலும் நேரான வழியைப் பெற்று விடுவீர்கள்'' என்ற கருத்தைக்கூறி சஹாபாக்களின் சிறப்பை வெளிப்படுத்தினார்கள்.

''எனக்குப் பின் என் தோழர்களுக்கிடையே ஏற்படும் கருத்து வேற்றுமையைப்பற்றி நான் என் இறைவனிடம்விசாரித்தேன். அதற்கு அவன், 'முஹம்மதே! நிச்சயமாக, உம்முடைய தோழர்கள் என்னுடைய சமூகத்தில் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போன்று உள்ளனர். அவர்களில் சிலர், சிலரைவிடப் பலசாலிகளாக இருக்கின்றனர். அன்றி, எல்லோருக்கும் பிரகாசம் இருக்கிறது. எனவே எவர் அவர்களின் எந்த வேறுபாடான கருத்துக்களைக் கடைபிடித்த போதிலும் அவர் என் சமூகத்தில் நேர்வழி பெற்றவராவார்' என்று ''வஹீ'' மூலம் எனக்கு அறிவித்தான்

என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி, மேலும் 'என் தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றிய போதிலும் நேர்வழி பெற்று விடுவீர்கள்' என்றும் அவர்கள் எடுத்துரைத்ததை நான் செவியுற்றேன்.''

அறிவிப்பவர்:- ஸஈதுப்னு முஸையப் (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்கள் மூலமாக அறிந்தது.

ஆதாரம்:- ரஜீன்

எல்லா சஹாபாக்களின் மீதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேசம் கொண்டிருப்பினும் கூட ஒரு சிலர் சிலரைக் காட்டிலும் அதிக சிறப்பைப் பெற்று நன்மதிப்பைப் பெற்றிருந்தார்கள் என்பதை மறுக்க முடியாது, எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில குறிப்பிட்ட சஹாபிகளுக்கு நன்மாராயம் அளித்துள்ளதைப்போன்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள் என்பதை பல ஹதீதுகள் வாயிலாக அறிகின்றோம். எனவே ஹதீதுகளை முழுமையாக ரிவாயத் செய்தவர் பதிவு செய்யப்பட்ட கிரந்தங்களின் நாமங்களைத் தனித் தனியாகக் குறிப்பிட்டு எழுதாமல் அதனுடைய மூலக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சஹாபாக்களைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னக் கருத்துக்களை நன்மாறாயங்களை இங்கே கொடுக்கின்றோம். சஹாபாக்களைப்பற்றி இங்கு குறிப்பிடுவதற்கு முன் ஒருசிறு குறிப்பையும் கொடுத்து விடுவது நல்லது என்பதால் அதையும் கூறி விடுகிறேன். அதாவது ஒவ்வொருதடவையும் ஸஹாபாக்கள் காரணத்தைக் கேட்பதற்குப் பின்போ, அலலது அவர்களாகவே வெளிப்படுத்தும் இயல்பு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்திலே காணப்பட்டது. அப்படி வெளிப்பட்ட உண்மைகள்தான் இங்கே ஒளிரப் போகின்றன.

—★—

# 47. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசுகின்றார்கள்

''இந்த உலகத்தில் உங்களில் யாரேனும் சுவர்க்கவாதிகளை உயிரோடு காணவேண்டுமென்று விரும்பினால் இதோ இந்த பத்துப்பேர்களை பார்த்துக் கொள்ளுங்கள். எனதருமை சஹாபாக்களில் முதன்மையிடம் பெறுபவர் அபூபக்கர் (ரலி) அவர்கள் சுவனவாசியே!

அடுத்து உமர் (ரலி) சுவனவாசியே!

பிறகு உஸ்மான் (ரலி) சுவனவாசியே!

ஜுபைர் (ரலி) சுவனவாசியே!

ஸஃதுப்னு மாலிக் (ரலி) சுவனவாசியே!

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபு (ரலி) சுவனவாசியே!

ஸஈதுப்னு ஜைது (ரலி) சுவனவாசியே!

என்னுடைய சமூகத்தினரில் அபூபக்கர் (ரலி) அவர்கள் தாம் அதிக இரக்க சித்தமுள்ளவர்.

அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் அதிகக் கடுமையானவர் உமர் (ரலி); அதிக நாணமுடையவர் உஸ்மான் (ரலி); அழகாகத் தீர்ப்புக் கூறுபவர்களில் முதன்மையானவர் அலி (ரலி), ஹலால் ஹராமைப்பற்றி அதிகமாக அறிந்தவர் முஆதுப்னு ஜபல் (ரலி); பாகப்பிரிவினை பற்றிய கல்வியறிவினை நன்கு அறிந்தவர் ஜைதுப்னு ஸாபித் (ரலி); திருக்குர்ஆனை அழகாக ஓத மிகவும் அறிந்தவர் உபையிப்னு கஃபு (ரலி).

உண்மையாளரில், ஈஸா (அலை) அவரைப்போல் பேணுதலில் நிகருடையவர் அபூதர் (ரலி)

எனக்குப்பின் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) இருவரை பின்பற்றுங்கள். அம்மார் இப்னுயாஸிர் (ரலி) அவர்களின் நடைமுறையைப் பின்பற்றி ஒழுகி நேர்வழிப் பெறவும்.

இப்னு மஸ்வூத் (ரலி) அறிவிக்கும் ஹதீஸ்களை உண்மை யானது என்று நம்புங்கள்.

என்னுடைய குடும்பத்தில் மிகவும் உவப்பானவர் எனது மகள் பாத்திமா (ரலி). உமர் (ரலி) அவர்களைவிட மிகவும் மேலானவர் எவர் மீதும் பொழுது புலர்வதுமில்லை; மறைவதுமில்லை.

அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோர் சுவனவாசிகளில் முன்னோர்களிலும் பின்னோர்களிலும் உள்ள முதியவர்களுக்குத் தலைவராக இருப்பார்கள். நபிமார்களையும், ரசூல்மார்களையும் தவிர்த்து.

தியாகியை (ஷஹீதாகக் கூடியவரை) இந்த மண்ணின் மீது நடமாடப்பார்க்க விரும்பும் எவரும் தல்ஹதுப்னு உபைதுல்லாஹ் (ரலி) யைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நபிக்கும் சில குறிப்பிட்ட சீடர்கள் உண்டு, நிச்சயமாக என்னுடைய குறிப்பிட்ட சீடர் ஜுபைருப்னுல் அவாம் (ரலி) தாம்.

ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு நம்பிக்கைக்குரியவர் உண்டு. நிச்சயமாக நம்முடைய நம்பிக்கைக்குரியவர் அபூ உபைததுப்னுல் ஜர்ராஹ் (ரலி) அவர்களாவார்.

ஜஃபர் (ரலி) சுவனபதியில் வானவர்களுடன் பறந்து செல்வதை நான் கண்டேன். மேலும், அவர்கள் ஏழைகளுக்கு மனிதர்களில் மேலானவர்களாக இருந்தனர். இன்னும் என்னுடைய உருவத்திலும், குணத்திலும் ஒத்திருக்கிறார்.

நான் ஹஸன் (ரலி) அவர்களை நேசிக்கிறேன். இறைவா! எனவே நீயும் இவரை நேசிப்பாயாக.



ஹஸன் (ரலி), ஹுஸைன் (ரலி) ஆகியோர் சுவனத்து இளைஞர்களின் தலைவராவார்கள்.

தானே குண மணம் பெற்றவரும், நற்செயல்களின் காரணமாகக் குண மணம் பெறப்பட்டவர் அம்மார் (ரலி), மேலும் அவரின் இளகிய எலும்புகளெல்லாம் அதன் துவக்கம் முதல் நம்பிக்கையால் நிரப்பப்பட்டிருக்கிறது.

ஹுதைஃபா (ரலி) உங்களுக்கு ஏதும் கூறினால் அதனை நீங்கள் உண்மையென நம்புங்கள்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) உங்களுக்கு எதை ஓதித் தருகிறார்களோ அதனை ஓதுங்கள்.

எவன் கைவசம் என்னுடைய உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக எனக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட பட்டாடையைவிட சுவனபதியில் ஸஃதுப்னு முஆது (ரலி) யின் மேல் துண்டு இதைவிட மேலானதாக இருக்கும்.

இஸ்லாம் மார்க்கத்தில் முதன் முதலாக பிறந்த குழந்தை அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி).

ஒரு தடவை உபையுப்னு கஃபு (ரலி) யின் பெயரை அல்லாஹ் குறிப்பிட்டு அவருக்கு முன் 98-வது சூராவை ஓதுமாறு கட்டளையிட்டான்.

அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்களுக்கு தாவூத் (அலை) அவர்களின் ஓசை நயங்களில் ஓர் ஓசை நயம் அளிக்கப் பெற்றுள்ளார். எனவே அவர் குர்ஆன் ஓதுவது எனக்கு மிகவும் கவர்ந்து விட்டது.

இம் மண் மீது உயிரோடு நடமாடும் சுவனவாசிகளில் உள்ளவர்தான் 'அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அலங்கோலமாகவும் பிறரால் இளக்காரமாக மதிக்கத் தக்கவர்களாகவும் இருக்கும் பலர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொண்டு

எதன் மீதும் சத்தியம் செய்து விட்டால் அதனை அல்லாஹ் நிறைவேற்றியே தீருவான். இத்தகையவர்களில் உள்ளவர் தான் பராஃ இப்னு மாலிக் (ரலி).

காலித் இப்னு வலீத் (ரலி) அல்லாஹ்வுடைய நல்லடி யாராவர். மேலும் இவர் அல்லாஹ்வுடைய வாள்களில் ஒரு வாளாகும்'' என்ற கருத்துக்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியிட்டார்கள்.

ஆதாரம்:- (புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மதி ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் உள்ள ஹதீதுகளை ஆதாரமாகக் கொண்டது.)

—★—

## 48. இறுதி வார்த்தைகள்

விசுவாசிகளே!

இது வரையில் நீங்கள் இங்கிருக்கவில்லை. 1400 ஆண்டு களுக்கு முன் சத்திய சஹாபாக்கள் வாழ்ந்திருந்த காலத்திற் குள்தான் நடமாடிக்கொண்டிருந்தீர்கள். இது உங்களுடைய ஆன்மீக நடமாட்டங்களின் ஒரு பகுதி. உங்களுடைய உள்ளம் இப்பொழுது ஈமான் என்னும் இறை விஸ்வா சத்தினால் நிறைந்திருக்கும்; மகிழ்ச்சியடைந்திருக்கும். அதற் காக இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

அல்ஹம்துலில்லாஹ்!

''இறை நம்பிக்கையாளரின் செயல் மிகவும் அருமை யானது, காரணம் அவருடைய ஒவ்வொரு செயலிலும் அவ ருக்கு நன்மையே உள்ளது. இறை நம்பிக்கையற்ற எவருக் கும் இது கிட்டாது. இறை நம்பிக்கையாளருக்கு யாதேனும் ஒரு மகிழ்ச்சி ஏற்படின் அவர் அதற்கு நன்றி கூறுவார். யாதே னும் ஒரு தீங்கு நிகழின் அதனை அவர் பொறுத்துக்கொள் வார். எனவே (இரண்டும்) அவருக்கு நன்மையாகவே முடி கின்றன என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினர்.



அறிவிப்பவர்:- ஸுஹைப்(ரலி)
ஆதாரம்: முஸ்லிம்

படிக்கப் படிக்க பரவசப்படுத்திய இந்நூல் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுவதற்குக் காரணமே நீங்கள் அல்லாஹ்வின் மீதும், ரசூல் (ஸல்) அவர்கள் மீதும்கொண்ட பேரன்பின் காரணமாகவே என்பதை அறிந்து கொள்ளுங்கள். இதைப்படிக்கும் பொழுதுகூட உங்களுடைய உள்ளம் அல்லாஹ் ரசூலின் பால் சார்ந்து கண்கள் குளமாகியிருக்கும் என்பதை உணர்கிறேன்.

இப்படியே நான் உங்களோடு பேசிக்கொண்டே இருந்து விட்டால் போதுமா! இன்னும் வெளிப்படுத்தவேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளை கவனிக்க வேண்டாமா? இதோ! மீண்டும் சஹாபாக்கள் எங் களுடைய இல்லத்தில் நிறைந்திருக்கிறார்கள். அவர்களைக் காக்க வைக்க விரும்பவில்லை. எனவே உங்களிடமிருந்து தற்காலிக விடை பெறுகிறேன்.

இறுதியாக ஒரு சின்னக் குறிப்பு:

இந்த நூல் உருவாவதற்காக அல்லாஹு தஆலா முழு உதவியையும் அளித்திருக்கின்றான். அவனுடைய கிருபை யினாலேயே இதை எழுதி முடித்திருக்கின்றேன்.

மேலும் இந்த நூலை எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே அவன் என்னை கண்காணித்து வழி நடத்திச் சென்றிருக்கின் றான். தன்னுடைய ஹபீப் முஹம்மது (ஸல்) அவர்களைப்

பற்றிய நூலாக இருப்பதால் மேலும் மேலும் தன்னுடைய ரஹ்மத்தை வருஷித்து கொண்டே யிருக்கின்றான்.

இந்த நேரத்தில் ஞானிகளுக்கெல்லாம் நாயகமாக விளங்கும் கௌது முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானீ (ரலி) அவர்களுக்கும் ''குத்புல் ஹிந்த்'' அஜ்மீர் காஜா கரீப் நவாஸ் ஏர்வாடி சைய்யது சுல்தான் இப்ராஹீம் ஷஹீது வலியுல்லாஹ் (ரஹ்) மற்றுமுள்ள வலிமார்கள், ஆன்மீக நடமாட்டங்களில் பங்குகொண்டிருக்கும் இன்றைய காலகட்ட ஆத்மாக்கள் யாவருக்கும் நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் விரும்பும் நேரமெல்லாம் மீண்டும் மீண்டும் இந்த நறுமணத்தை நுகர்ந்து பார்த்துக்கொள்ளுங்கள்.

எல்லோருக்கும் மீண்டும் நன்றி!

அல்ஹம்து லில்லாஹ்!

அடுத்த புத்தகத்தில் இன்ஷா அல்லாஹ் சந்திப்போம்.